Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**English Academy**

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்

Better place for your Children



(சி-186)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 08 (13.12.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 73

## யாழ்.குடாநாட்டில் பூரண ஹர்த்தால் வழமைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்!

நெல்லியடியில் பொதுமக்கள் மீது பொலிஸார் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து குடாநாடு தழுவிய வகையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.


நேற்றைய தினம் குடாநாட்டிலுள்ள அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் அனைத்தும் தமது பணிகளை இடைநிறுத்திக்கொண்டன.

யாழ். குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் என்பன மூடிக்கிடந்ததுடன் அரச மற்றும் தனியார் போக்குவரத்துக்களும் நேற்றைய தினம் நடைபெறவில்லை.

யாழ். நகரை அண்டிய வீதிகளில்

(10ஆம் பக்கம் பார்க்க)





நேற்றைய ஹர்த்தாலினால் வெறிச்சோடிக் காணப்பட்ட யாழ். நகரப்பகுதியும் யாழ். பஸ் நிலையப் பகுதியும்.

## அமைச்சர், பொலிஸ் அதிகாரிகள் விஜயம்; நெல்லியடியில் கடைகள் இன்று திறக்கப்படும்!


(யாழ்ப்பாணம்)

நேற்று நண்பகல் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.பிரேமரட்ண தலைமையிலான பொலிஸ் உயர் அதிகாரிகள் குழு நெல்லியடிப்பகுதிக்கு விஜயஞ் செய்தனர். இவர்கள் பொலிஸாரின் தாக்குதலால் சேதமடைந்திருந்த கடைகளைப் பார்வையிட்டனர். குறிப்பாக - கடைகளை நோக்கி பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் கடைகளில் இருந்தவர்கள் படுகாயமடைந்தமை தொடர்பான இடங்களைப் பார்வையிட்டதுடன், கடை உரிமையாளர்களிடம் நடைபெற்ற சம்பவம் தொடர்பாகக் கேட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தீர்வே வேண்டும்; ஜேர்மனிடம் ஆயர் கோரிக்கை!

### விண்ணாணம் விநாசியர்



பிளேனிலதான் கொன்ரெயினர் வாறது, இப்ப கொன்ரெயினருக்குள்ள பிளேனோ..?

## தூதுவருடன் நேற்றிரவு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சு மூலம் தீர்வுகாணவே விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர். நீதியான தீர்வு கிடைப்பதற்கு சர்வதேச சமூகம் உதவியளிக்க வேண்டும் என நேற்றிரவு ஆயர் இல்லத்தில், தம்மைச் சந்தித்த ஜேர்மன் தூதுவர் எலியாஸிடம் யாழ். ஆயர் கோரிக்கை விடுத்தார்.**

யாழ்ப்பாணம் வந்துள்ள ஜேர்மன் நாட்டுத்தூதுவர் ஜாகன் எலியாஸ், நேற்றிரவு- யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, ஜேர்மன் வெளிநாட்டமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இயக்குனர் கிறிஸ் ரொப்முல்லரும் உடனிருந்தார்.

இச்சந்திப்பின்போது, தற்போதைய அரசியல் நிலைமைகளை விளக்கிக் கூறிய யாழ். ஆயர், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு கிடைப்பதற்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டுகின்றனர். யுத்தத்தை அவர்கள் விரும்பவில்லை. இந்நிலையிலேதான் நோர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குமூலங்கள் புதிய பொலிஸார் நடவடிக்கை

### பொதுமக்கள் அச்சம் தெரிவிப்பு

நெல்லியடி சம்பவத்தில் தாக்கப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் வாக்குமூலங்கள் இன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பதிவு செய்யப்படும் என பொலிஸ் வட்டாரங்களில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார் தொடர்ந்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திலேயே பணியாற்றுவதால் - அவர்களை அடையாளம் காட்டவோ வாக்குமூலம் அளிக்கவோ பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (13)

## கொள்கலனுக்குள் இருந்து இரு இலகு விமானங்கள் மீட்பு!

### கொம்பனி வீதியில் நேற்றுப் பரபரப்பு

(கொழும்பு நிருபர்)

கொழும்பு கொம்பனி வீதியில் கொள்கலன் ஒன்றிலிருந்து நேற்றுக் காலை இரண்டு இலகுரக விமானங்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

கொம்பனி வீதியில் இருந்த கொள்கலன் ஒன்றில் நான்கு இருக்கை கொண்ட விமானம் ஒன்றும் இரண்டு இருக்கை கொண்ட இன்னொரு விமானமும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை மீட்ட பொலிஸார் துரிதகதியில் விசாரணைகளை நடத்தினர்.

இதில் - இவ்விமானங்கள் 1981 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதென்றும், கட்டுக்குருந்த விமானத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கிற்கு உலக வங்கி 31 மில்லியன் டொலர் நிதியுதவி!

(திருமலை)

உலகவங்கி, வட-கிழக்கில் அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக, விசேட செயற்திட்டத்தின்கீழ் 31 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குகிறது.

முதற்தடவையாக இவ்வாறு வெளிநாட்டு உதவி, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படுவது தொடர்பான விசேட ஒப்பந்தமொன்று நேற்றுத் திருகோணமலையில் கைச்சாத்திடப்பட்டது.

உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றுக்கும் வட-கிழக்குப் பகுதி மாகாண அரச நிர்வாகத்துக்குமிடையில் ஏற்பட்ட முதலாவது ஒப்பந்தம் இதுவாகும். நேற்று ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வில் கலந்துகொண்ட உலக வங்கிப் பிரதிநிதி அங்கு உரை நிகழ்த்தினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளப் பகுதியில் மீட்கப்பட்ட சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகரிலிருந்து காணாமல் போய், புளியங்குளத்தில் வைத்து மீட்கப்பட்ட மூன்று பாடசாலை மாணவிகளும் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


கடந்த 30 ஆம் திகதி காலை 6 மணிக்கு, எவருக்கும் சொல்லாமல வீட்டிலிருந்து புறப்பட்ட இம்மூன்று பாடசாலை மாணவிகளும் கொழும்பு செல்லும் நோக்குடன் பஸ்ஸில் பயணஞ்செய்து, நண்பகல் இரண்டு மணியளவில் வவுனியா புளியங்குளத்தினூடாக முச்சக்கர வண்டியொன்றில் பயணஞ்செய்தபோது, இவர்களை ஏற்கனவே அறிந்த ஓர் உறவினர் இவர்களைத் தடுத்து நிறுத்தி இவர்களின் நோக்கத்தை அறிந்துகொண்டபின், வவுனியாவிலுள்ள தமி

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன், கருணா வன்னி வந்தனர்

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா ஆகியோர் நேற்றுக்காலை 8 மணியளவில் வன்னி வந்து சேர்ந்தனர்.

ஒஸ்லோப் பேச்சுக்களையடுத்து சுவிஸ் சென்ற இவர்கள், அங்கிருந்து நேற்றுமுன்தினமிரவு கொழும்பு வந்து சேர்ந்திருந்தனர்.



திருமலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளரும், மாகாணசபைச் செயலாளரும். (படம்: சசிக்குமார்)

# சுயாதீன விசாரணைக்கு உத்தரவிட பிரதமரைக் கோரி மகஜர் சமர்ப்பிப்பு!

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது பொலிஸார் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தும், பொலிஸாரின் அத்துமீறிய அடாவடித்தனங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுக்கக்கோரியும், நேற்றுப் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்- போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திலும் கையளிக்கப்பட்டது.

நேற்றையதினம் காலை 11.30 மணியளவில், பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அருகே ஒன்றுகூடி, அங்கிருந்து- மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குச் சென்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி றொகான் சந்திரசேகரவிடம் 45 பொது அமைப்புக்களின் சார்பில், பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை, யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கையளித்தார்.

பின்னர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திலிருந்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்குச் சென்று, அக்குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதியிடமும் 45 பொது அமைப்புக்களின் சார்பில் மேற்படி மகஜரின் பிரதியொன்று கையளிக்கப்பட்டது.

நேற்றுக் கையளிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முகவரியிடப்பட்ட மகஜரின் முழு விபரமும் வருமாறு:-

கடந்த 10.12.2002 ஆம் திகதி நெல்லியடியில் பொலிஸார் மேற்கொண்ட தேவையற்ற அத்துமீறல்கள் தொடர்பாக, நேற்று ஒன்றுகூடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 45 பொது அமைப்புக்கள், இவற்றைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர்.

10.12.2002 ஆம் திகதி நெல்லியடியில் இடம்பெற்ற ஒரு அமைதியான ஆர்ப்பாட்டத்தைக் கையாளும்போது, கடைகளுக்குள் புகுந்து வர்த்தகர்களை வெளியில் இழுத்தும், பொருட்கள் வாங்க வந்தவர்களையும் சுட்டும், மிருகத்தனமாகத் தாக்கியும், ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நியமங்களையும் பொலிஸார் மீறியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஐவரும், பாரிய உடற்காயங்களுடன் வேறு ஐந்து அல்லது ஆறு பேரும் மந்திகை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் தவச்செல்வம் கைக்குண்டு வீச்சில் காயமடைந்துள்ளார். இவர் குறிவைத்துத் தாக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

அமைதியையும் சமாதானத்தையும் பேணவேண்டிய பொலிஸார் வன்முறையிலான வழிமுறைகளைப் பின்பற்றிப் பீதியையும், சமாதானத்திற்குப் பங்கத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட கண்மூடித்தனமான சூட்டு நடவடிக்கை மற்றும் தாக்குதல்களாலேயே இவையெல்லாம் நிகழ்ந்துள்ளன.

ஆர்ப்பாட்டப் பேரணி கலைந்து பல மணி நேரம் கழித்து சம்பவ இடத்துக்கு வந்த 14 அப்பாவிப் பொதுமக்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் யாவரும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் முன்பும், யாழ். பதில் நீதவான் முன்பும் ஆஜர் செய்யப்படுவதற்கு முன்பு மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவரைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்குமாறு வைத்திய அதிகாரிகள் விடுத்த பணிப்பை மீறியதன் மூலம், பொலிஸார் பாரிய மனித உரிமை மீறலைப் புரிந்துள்ளனர். இதனிலும், மோசமானது பதில் நீதவானது இவ்வாறான கட்டளையையும் அவர்கள் மீறியது ஆகும்.

மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 ஆம் திகதி பொலிஸார் இந்த அத்துமீறல்களையும் மனித உரிமை மீறல்களையும் புரிந்தமை ஆச்சரியத்திற்குரியவை.

பொலிஸார் புரிந்துணர்வு - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறித் ஆயுதங்களைப் பாவித்தமை மிகவும் கவலைக்குரியதாகும். இவையெல்லாம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு எடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகள் எனக் கருத யாழ்ப்பாண மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஆகவே, பின்வருமாறு தங்களைக் கோருகிறோம்.

- ஒரு சுயாதீன விசாரணை நடாத்த உத்தரவிட வேண்டும்.
- புரிந்துணர்வு ஒப்பந்த மீறல், மனித உரிமை மீறல் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்குப் பொறுப்பான எல்லாப் பொலிஸார் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- நெல்லியடி வர்த்தக சமூகத்தினரை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தித்து இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நடைபெறாது என உத்தரவாதமளிக்க வேண்டும் எனப் பணிக்க வேண்டும்.

இந்த வர்த்தகர்கள் இவ்வாறான உத்தரவாதம் கிடைக்கும் வரை கடைகளைத் திறப்பதில்லையென முடிவு செய்திருப்பதால் இந்த உறுதிமொழி அவசியமாகிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில், யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

# புலிகளின் தொழில்நுட்ப சாதனங்கள் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்!

'புலிகளின் குரல்' வானொலிக்கு ஒலிபரப்புச் சாதனங்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கியது தொடர்பான, முழுமையான அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் -

புலிகளால் கொண்டு செல்லப்பட்ட தொழில்நுட்பச் சாதனங்களுக்கு வரி விதிக்கப்பட்டதா என்றும், நோர்வேத் தூதரகத்திலிருந்து இவை எடுத்துச்செல்லப்பட்டதும் சுங்க விதிமுறைகளுக்கு அமைவாகக் கொண்டு செல்லப்பட்டதா எனவும் எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளிக்கும்போதே, நிதியமைச்சர் சொக்ஸி இதனைத் தெரிவித்தார்.

புலிகளால் மேற்படி சாதனங்கள் கொண்டு செல்லப்பட்டது தொடர்பான சகல விபரங்களையும் பெற்றுக் கொண்ட பின்னர், முழு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# சுப்ரீம் கவுன்சில் அமைத்தால் ஹக்கீமுடன் இணையத் தயார்!

## நூர்தீன் மசூர் அறிவிப்பு

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சுப்ரீம் கவுன்சில் ஒன்றை அமைக்க இணங்கினால் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக வன்னிப் பிராந்தியப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக, ஐந்து முதல் ஏழு பேர் கொண்ட சுப்ரீம் கவுன்சில் ஒன்றை அமைக்க வேண்டும் எனத் தாம் வலியுறுத்தி வருவதாகவும் இதை நிறைவேற்றினால் தாம் ஹக்கீமுடன் இணைந்து பணியாற்றத் தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை - இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், தங்களது நடைமுறையில் இருப்பது அஷ்ரப்பினால் வகுக்கப்பட்ட யாப்பு என்றும், இதை மாற்றியமைப்பது அஷ்ரப்புக்குச் செய்யும் துரோகம் எனவும் தெரிவித்துள்ளார்.

# 30 வருடங்களாகத் திருத்தப்படாத நாவற்காடு வீதி!

நாவற்காடு தனிவளை வீதி கடந்த 30 ஆண்டுகளாகத் திருத்தப்படாமல், குன்றும் குழியுமாக இருப்பதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வைத்தியசாலை, ப.நோ.கூ. சங்கம், பாடசாலை, சந்தை மற்றும் விவசாய நிலங்களுக்கும் செல்கின்ற பிரதான பாதையாக இவ்வீதி விளங்குகிறது. இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலமுறை எடுத்துக் கூறியும் எதுவிதபலனும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (92)

## கலாசாலை மாணவர் ஒன்றியக் கூட்டம்

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் ஒன்றிய் செயற்குழுக் கூட்டம், இன்று காலை 10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல வகுப்பு மாணவப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளும்படி ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார். (87,110)


ராஜா யாழ்ப்பாணம்.



ஆறாவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-262)



அன்பளிப்பு; அன்பளிப்பு, அன்பளிப்பு.

எமது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி எமது ஸ்தாபனத்தில் மாணவர்களுக்கான நூல்கள், புத்தகங்கள், (அப்பியாசப் புத்தகங்கள் தவிர்த்து), உபகரணங்கள், காட் வகைகள் மற்றும் கல்வி சம்பந்தமான விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை ௨,000/- இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்பாக, ஒவ்வொரு ௨,000/- இற்கும் சைனாவில் (China) இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பாடசாலை புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்படும்.

இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே. (சி-279)

ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



திறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் முரளி, பிரதியூஷா, மனோஜ், உமா நடித்த
கடல் பூக்கள்
17ஆம் திகதி முதல்
AIR FORCE - I
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நே) (சி-287)


# கேள்வி அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை

## யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலை தாதிய பாடசாலைத் தேவைகளுக்காகக் கீழ்வரும் தளபாட வகைகள் வழங்குவதற்காகக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இரும்புக் கட்டில்கள்
2. சாப்பாட்டு மேசைகள்
3. சாப்பாட்டு மேசைக் கதிரைகள்
4. மர அலுமாரிகள் (கண்ணாடிக் கதவுடன்)
5. மர அலுமாரிகள்
6. ரவல் ராக்கைகள்

1. மாதிரிப் பொருட்களை 21.12.2002 காலை 11 மணிவரை அலுவலக நேரத்தில் இப்பணிமனையில் பார்வையிடலாம்.
2. விண்ணப்பங்கள் யாவும் இப்பணிமனையால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பப்படிவத்தையும் பொருட்களின் மாதிரி வரைபடத்தையும் பெறுவதற்காக ரூபா 50ஐ இப்பணிமனையில் மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் பொருட்களை குறிப்பிட்ட தினத்தில் 31.12.2002 அல்லது அதற்கு முன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. விண்ணப்பங்கள் யாவும் 9"x4" தபாலுறையில் இடப்பட்டு தலைவர், கேள்விச் சபை, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமோ 23.12.2002 காலை 11 மணிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கேள்விப் பெட்டி உடனடியாகத் திறக்கப்பட்டு கேள்விகள் வாசிக்கப்படும் அதே நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் முகவரோ சமூகமளிக்கலாம்.

*வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்,*
*பணிப்பாளர்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*
*11.12.2002.* (சி-303)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

# கேள்வி அறிவித்தல் ~ 2003

கீழ்க்காணும் இடத்தில் உள்ள ஆட்டிறைச்சிக்கடையை 01.01.2003 முதல் 31.12.2003 வரையான காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | - | 20.12.2002 வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணி |
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி | - | 20.12.2002 வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிவரை |
| கேள்விகள் திறக்கும் திகதி | - | 20.12.2002 வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி |

| இறைச்சிக்கடை அமையவுள்ள இடம் | மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி (வற் நீங்கலாக) |
|---|---|---|
| மானிப்பாய் வீதியில் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் தற்போது இறைச்சிக்கடை நடைபெறும் இடம் | 2,500.00 | 15,000.00 |

குறித்த இறைச்சிக்கடைக்கான இடத்தை கேள்விக்காரரே ஒழுங்கு செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2002.12.11.* (சி-299)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# அவுஸ்ரேலியாவில் அகதிகளாக புகலிடம்; 15 இலங்கையரின் மனுக்கள் நிராகரிப்பு

## உடன் நாடு திரும்பவும் உத்தரவு

(சிட்னி)

கிறிஸ்மஸ் தீவில் சட்டவிரோதமாகத் தரையிறங்கியுள்ள 15 இலங்கை அகதிகளுக்கும் தாம் அடைக்கலம் வழங்கப்போவதில்லை என அவுஸ்ரேலிய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி இலங்கை அகதிகள் தமக்குப் புகலிடம் அளிக்கக் கோரி அவுஸ்ரேலிய அரசிடம் விடுத்திருந்த கோரிக்கை உறுதியாக மறுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், இவர்கள் உடனடியாக நாடுதிரும்ப வேண்டும் என்றும் அவுஸ்ரேலிய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. இதேவேளை, பசுபிக் தீவான நௌருவில் அவுஸ்ரேலிய அரசாங்கம் நடத்திவரும் அகதிமுகாம்களை, தொடர்ந்து பேணுவதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

நௌருவின் ஜனாதிபதி றெனோ ஹரிஸிற்கும், அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டோனருக்கும் இடையில் இவ் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதன்படி - 15 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ள நௌருவில், தொடர்ந்து அகதி முகாம்களைப் பேணுவதற்கான செலவுகளை அவுஸ்ரேலியா வழங்கும்.

## சுயதொழில் முயற்சி கடன் வழங்கல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமியவங்கி ஊடாக கிளை அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடனாக - 10 ஆயிரம் ரூபாவும், விவசாய அபிவிருத்திக் கடனாக 2000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கடன்பெற விரும்புவோர் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (25)

## மீசாலையில் மீண்டும் நூலகம்

மீசாலை ஐயா கடையடியில் இயங்கிய, சாவகச்சேரி நகரசபை கிளைப் பொதுநூலகம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீசாலை பங்களா வீதியில், மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. முன்னர் நூலகம இயங்கிய இக்கட்டடத்தில் இதுவரை சாவகச்சேரி நகரசபை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (34)




திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது, அரச அதிபர் பத்மநாதன், உதவி விவசாயப் பணிப்பாளர் சின்னத்துரை மற்றும் விவசாய உத்தியோகத்தர்கள், விவசாயிகளைப் படத்தில் காணலாம்.

# ஜே.வி.பியின் பல்கலை மாணவர் ஒன்றியம்; சட்டபூர்வமற்றதென அரசாங்கம் அறிவிப்பு!

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை அரசாங்கம் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளாது என, மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் ஆதரவுடன் கடந்த 20 வருடங்களாக இயங்கிவரும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் - நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

இந்த ஒன்றியம் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துதல், கல்வியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என கல்விக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

இது குறித்து, மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தியபோதும் அவை தோல்வியிலேயே முடிந்துள்ளன.

அத்துடன், இந்த மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்படுபவர்கள் - பல்கலைக்கழகத்தில் கற்காதவர்களாக இருப்பதுடன், இவர்கள் பல்கலைக்கழக மாணவர் விடுதிகளைப் பயன்படுத்துவதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், இம்மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளைச் சட்ட பூர்வமானதாக ஏற்றுக்கொள்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் கபீர் காசிம் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸில் பதிவுசெய்வதற்கு ஊடகவியலாளர்கள் தயக்கம்

(கொழும்பு நிருபர்)

ஊடகவியலாளர்களின் விபரங்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் விடுத்த கோரிக்கைக்குச் சரியான வரவேற்புக் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

ஊடகவியலாளர்கள் தமது விபரங்களைப் பொலிஸ் நிலையங்களில் வெளிப்படுத்துவதற்கு அஞ்சுவதாலேயே, பொலிஸ் மா அதிபரின் திட்டத்திற்குப் போதிய வரவேற்புக் கிடைக்கவில்லை எனத்தெரிய வருகின்றது.

கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர்களின் கொலைகளுடன் உயர் பொலிஸ் அதிகாரிகள் தொடர்புபட்டிருந்ததாக வழக்குகள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில், பொலிஸ் நிலையங்களில் பதிவுகளைச் செய்ய ஊடகவியலாளர்கள் தயங்குகின்றனர்.

ஊடகவியலாளர்களுடனான தொடர்பை வளர்த்துக்கொள்வதற்காக, சகல ஊடகவியலாளர்களினதும் விபரங்களைப் பொலிஸ நிலையங்களில் பதிவுசெய்யுமாறு, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# வட - கிழக்கில் இம்முறை அமோக நெல் விளைச்சல்

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இவ்வருடம் எதிர்பாராதளவு நெல் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வருடம் 1.9 மில்லியன் மெட்றிக்தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலங்களை விட இது மிகவும் அதிகமானதாகும்.

யுத்த அனர்த்தங்களால் கைவிடபபட்டிருந்த நிலங்கள், இம்முறை பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இம்முறை 670 ஆயிரம் ஹெக்ரயரில் பயிர்ச்செய்கை இடம்பெறுகிறது. இது வழமையைவிட 1 லட்சம் ஹெக்ரயர் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### முருகன் ஆலயம் புனரமைப்பு

(நுணாவில்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்திருந்த தென்மராட்சி, தென் மட்டுவில் வேரற்கேணி முருகன் ஆலயம் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையினை அடுத்து புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (37)

### கோழி வளர்ப்பு கருத்தரங்குகள்

(சரசாலை)

கோழி வளர்ப்புப் பற்றிய ஆலோசனைக் கருத்தரங்குகளை வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் நடாத்த கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி ஆலோசகர் வசீகரன் ஏற்பாடு செய்துள்ளார்.

எனவே, கோழி வளர்ப்போர் அனைவரையும் இக் கருத்தரங்குகளில் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (34)

### வங்கி ஓய்வூதியர் கௌரவிப்பு விழா

வங்கிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற வங்கி ஓய்வூதியர்களைக் கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வு- 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அருகாமையிலுள்ள யாழ்பாணக் கல்லூரியின்- பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு 10 மாதங்களில் 84 கோடி இலாபம்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், கடந்த பத்து மாதங்களில் மட்டும் 84 கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளதாக அக்கூட்டுத் தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இக்காலப்பகுதியில் ஒளிபரப்பு நேரங்களை விற்பனை செய்ததன் மூலம் 71 கோடி ரூபா இலாபம் பெறப்பட்டுள்ளது. கடந்த வருடம் ரூபவாஹினி கூட்டுத்தாபனம், 12 கோடி 80 லட்சம் ரூபா நட்டத்தை அடைந்தது எனவும் கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் - பெருமளவிலான இலாபத்தை ஈட்டியுள்ள முதலாவது அரச கூட்டுத்தாபனமாக ரூபவாஹினி கூட்டுத்தாபனமே இருப்பதாகவும், இந்த வருமானத்திலிருந்து - 200 நிரந்தர ஊழியர்களுக்கும், 250 ஒப்பந்த ஊழியர்களுக்கும் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சிக் கிளைக் கூட்டங்களை நடத்த வேண்டாமென உத்தரவு!

## அதாவுல்லா அணிச் செயலாளர் ஹவ்ரத்

(கல்முனை)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைக்குழுக் கூட்டங்களை நடத்தக் கூடாது என்றும், புதிய கிளைகளை அமைக்கவோ, உறுப்பினர்களைத் தெரியவோ வேண்டாம் எனவும் - அதாவுல்லா தலைமையிலான அணியின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஏ.எல்.எம். ஹவ்ரத் சகல அமைப்பாளர்களுக்கும் உத்தரவிட்டிருக்கின்றார்.

இது தொடர்பாக சகல கிளைகளினதும் அமைப்பாளர்களுக்கும் அனுப்பியுள்ள அவசர அறிக்கையில், தானே கட்சியின் யாப்பு விதிக்கமைய செயலாளராகப் பணிபுரிவதாகவும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நக்கப்பட்டுள்ளதால் அவரது உத்தரவுகளை எவரும் ஏற்கக்கூடாது என்றும், கட்சிக்கிளைப் புனரமைப்பு வேலைகளை மறுஅறிவித்தல் வரை இடைநிறுததி வைக்குமாறும் ஹவ்ரத் கேட்டுள்ளார்.

# நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக ஒலி, ஒளிபரப்பாகும்!

அடுத்த ஆண்டிலிருந்து நாடாளுமன்ற விவாதங்களை நேரடியாக ஒலிபரப்பவும், ஒளிபரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்துக்கான நாடாளுமனறக் கூட்டத் தொடரில் நிறைவுரையாற்றியபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற விவாதங்களை ரூபவாஹினி மூலமும், வானொலி மூலமும் ஒளி, ஒலிபரப்புவதற்கு ஏற்படும் செலவுகள் குறித்து திட்டமதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர், இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்கள், அங்கு எவ்வாறு நடந்து கொள்கிறார்கள், அவர்களின் செயற்பாடு எப்படியானதாக இருக்கிறது என்பன மக்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.

இதனாலேயே முக்கியமான விவாதங்களை நேரடியாக ஒலி, ஒளிபரபபு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இயற்கைச் சமநிலையை கட்டிக் காக்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரால் பயன்தரு நிழல் மரங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி மரக்கன்றுகள் - பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ளதால் - தேவைப்படுவோா, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒனறியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு - மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பரணீதரன் அறிவித்துள்ளார்.

### ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

(சரசாலை)

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தால் விசேட கல்வி வழிகாட்டலும், ஆலோசனை வழங்கலுமாகிய துறைகளுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு - இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 அல்லது 2 இனைச் சேர்ந்த பட்டப்படிப்பு, கல்வி டிப்ளோமா தகைமையுடன் கூடிய ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும், விண்ணப்பங்களை 20 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிபபாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (34)

வீதியோரங்களில் வைத்து விற்கும் உணவுப் பொருட்களை வாங்கி உண்ணாதீர்கள்.



~ தமிழீழ சுகாதார சேவை.

# மீண்டும் தெரு விளக்குகள் அரச அதிபர் நடவடிக்கை

(மானிப்பாய்)

குடாநாட்டின் வீதியோர மின்சார தெருவிளக்குகளை மீள் நிர்மானம் செய்வதற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் நகரசபைகள், பிரதேச சபைகள் ஊடாக மேற்படி திட்டத்தின்கீழ் வீதி விளக்குகள் அமைக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி - யாழ்.நகரப்பகுதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, நல்லூர், மானிப்பாய் ஆகிய இடங்களில் விரைவில் வீதியோர மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரமே, குடாநாடு முழுவதும் உள்ள வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்தும் இத்திட்டம் செயற்படுத்தப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (100)

## தென்மராட்சியில் மீள் குடியமர்வு கொடுப்பனவு அடுத்தவாரம் வழங்கப்படும்!

(மீசாலை)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா, அடுத்த வாரம்முதல் வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இக் கொடுப்பனவுக்காக 2 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இவை தெரிவுசெய்யப்பட்ட கிராம அலுவலர்கள் பிரிவில் உள்ள 134 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 'உ' அட்டை வைத்திருப்போருக்கான கொடுப்பனவு பற்றி எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (25)




கம்பஹா மாவட்டத்திலிருந்து சமாதான நல்லெண்ணத்திற்காக வருகை தந்த, கிரிபத்கொட விகாரமாதேவி மகளிர் வித்தியாசாலை மாணவிகள் - யா/இராமநாதன் கல்லூரி நிறுவுனர் தின, பரிசளிப்பு விழா நிகழ்வின்போது அரங்கேற்றிய 'சாந்தியும் சமாதானமும்' என்ற நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (SS)

# பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் தனிப்பட்ட செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு!

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பட்டினிக்கு எதிரான நிறுவனம் பிரதேச செயலகத்துடன் இணைந்து செயற்படாதிருப்பதை பிரதேச செயலர் நா.வேதநாயகன் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிறுவனம் கிணறு திருத்துதல், விதைநெல் வழங்குதல், விவசாய உள்ளீடுகள், விவசாய உபகரணங்கள் என்பவற்றை வழங்கி வருகின்றது.

இவ்விநியோகம் தொடர்பாக பிரதேச செயலகத்துடன் இணைந்து செயற்படாமல் தன்னிச்சையாக தொழிற்படுவதாக பிரதேச செயலர் மேலும் கூறினார்.

குறிப்பாக கிணறு திருத்திய பின்னர்தான் எமக்கு அது பற்றிய செய்தி தெரியவருகின்றது எனவும், இதனால் குறிப்பிட்ட பகுதி மக்கள் மட்டும் பயன்பெறுவார்கள், அதேவேளை, ஏனைய மக்கள் பாதிக்கப்படுவார்கள். மேலும், குறிப்பாக மாசீன் கூடல், பெரியவிளான், பண்டத்தரிப்பு போன்ற பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும், அத்துடன் இவ்வுற்பத்திப் பொருட்களை வழங்கும்போது கமநலசேவை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துச் செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரதேச செயலரின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட, பட்டினிக்கெதிரான நிறுவனப் பிரதிநிதிகள் இனிவருங் காலத்தில் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு ஆலோசித்து ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதாக இணக்கம் தெரிவித்துள்ளனர். (100)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி 27 ஆம் திகதி ஆரம்பமாகும்!

## யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

(மானிப்பாய்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி மாதம் ஐந்தாம்திகதி வரை - தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

இம்முறை தமிழ்மொழி மூலம் விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள், வடக்கில் - யாழ்ப்பாணம், வவுனியாவிலும், கிழக்கில் - மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனையிலும் - மற்றும் மலையகத்தில் - கண்டி, நுவரெலியா, நாவலப்பிட்டி, குருநாகல் ஆகிய பிரதான நகரங்களிலும் நடைபெறும். க.பொ.த (சா.த) பரீட்சைகள் இன்றுடன் முடிவடைவது குறிப்பிடத்தக்கது. (100)

## அதிக மாத்திரைகள் உட்கொண்டவர் வைத்தியசாலையில்

(கொழும்புத்துறை)

மலேரியா மாத்திரைகளை அதிகளவாக உட்கொண்டவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கனகராஜா சிவதீபன் (வயது 21) என்பவரே சிகிச்சைக்காக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார். (60)

## பளை - கல்விக் கோட்ட

# கல்வி அபிவிருத்திக் கூட்டம் கிளிநொச்சியில் நடக்கும்!

(சரசாலை)

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி வலய கல்வி வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் முற்றாக அல்லது பகுதியாகச் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் தளபாடங்களின் விபரங்களும், திருத்தக்கூடிய தளபாடங்களின் விபரம், பாடசாலைகளுக்குத் தேவைப்படும் உபகரணங்களின் விபரம், 2002 இல் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களின் விபரங்கள் போன்றவற்றை அங்கு கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் ஆண்டுகளுக்கான கல்வி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (34)

## மரக்கறி விதைகள் அன்பளிப்பு

வடஇலங்கை சர்வோதய நிறுவனம் புங்குடுதீவுப் பகுதியிலுள்ள கிராமங்களில், தெரிவு செய்யப்பட்ட 260 குடும்பங்களுக்கு மரக்கறி விதைகளை இலவசமாக வழங்கியுள்ளது.

இதேசமயம், அப்பகுதியில் மேலும் 150 குடும்பங்களுக்கு சமண்டலை, தேக்கு, தென்னை, கமுகு போன்ற பயன்தரு மரங்களையும் வழங்கி இருப்பதாக மேற்படி நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

## தென்மராட்சிப் பகுதியில்

# பயிர்ச்செய்கை இடம்பெறாத நிலப்பரப்பு விவரம் சேகரிப்பு!

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயம் மேற்கொள்ளப்பட முடியாத நிலையில் இருக்கும் விவசாய நிலங்கள் பற்றிய விபரங்கள் தற்போது கமநல சேவைகள் நிலையங்களால் திரட்டப்பட்டு வருகிறது.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது இருக்கும் நிலங்களை, பயிர்ச்செய்கை நிலப்பரப்பில் இருந்து நீக்கிவிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, விவசாயிகள் தத்தமது விவசாய சம்மேளனம் ஊடாக கமநல சேவைகள் நிலையத்தில் உவர் நிலங்களின் விபரங்களையும் வழங்கியுதவுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (34)

# புதுப்பிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை!

## பொலிஸ் எச்சரிக்கைக்குள்ளாகும் சாரதிகள்

(சரசாலை)

சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக தம்மிடம் இருந்த அனுமதிப்பத்திரத்தை கொழும்பு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சாரதிகளுக்கு, இதுவரை புதிய அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் சாரதிகள் பெருஞ் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்தபோது, பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தின் செல்லுபடியாகும் திகதி முடிவடைந்துவிட்டதால் சாரதிகள் பொலிசாரினது எச்சரிக்கைக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (34)

# மானிப்பாய் பிரதம தபாலகத்துக்கு விரைவில் காணி கொள்வனவு

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதம தபால் நிலையத்திற்கு நிரந்தரமாக காணி இல்லாதிருப்பதால், பல சிரமங்களை எதிர்நோக்குவதாக அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது நாட்டு நிலைமை சீரடைந்து வருவதால் ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்ததும், விரைவில் மானிப்பாய் மத்தியில் தபால் நிலையத்திற்கு காணி வாங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச செயலர் ந.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மேலும், இப்பிரதம தபால் நிலையம் தற்போது மானிப்பாய் வீதியில் பிரதேச சபைக்கு அருகிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (100)

## குடிநீர் வசதியற்ற நிலையில் பாடசாலை

ஆனைக்கோட்டைச் சந்தியில் தற்காலிகமாக இயங்கிவரும், மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு தண்ணீர் தாங்கி இல்லாமையினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், மாணவர்கள் தண்ணீர் தேடி பிரதான வீதியைக் கடந்தே செல்லவேண்டியிருப்பதால் வீதி விபத்துக்கள் நடைபெற ஏதுவாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பாடசாலை அடிப்படை வசதிகளற்று மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (100)

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : க.கவுதமன்
முகவரி: 5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

பத்தாவது அகவையில்.





பெயர் : ஸ்ரீ.கவுசல்யா
முகவரி: இல.5, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்


சிறாரின் பெயர்:.................................

முகவரி:.................................

பிறந்த ஆண்டு:.................................

சுப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்




# நாம் வேண்டுவது சமத்துவம் ; கட்டுண்டுபோகும் சிறையல்ல!

❖ ❖ ❖

**பல வகையிலும் அடிமைப்படுத்தப்படும் பெண்கள் சமூகத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி- அவர்களுக்கு வழிகாட்டும் வகையில் - அம்பாறை மாவட்டத்தில் இயங்கிவரும் "பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின்" இணைப்பாளர் வாணி சைமனுடனான நேர்காணல் இது.**

❖ ❖ ❖



★ **கேள்வி:- அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் நோக்கம், இலக்கு என்ன?**

★ **பதில்:-** எமது நிறுவனத்தின் இலக்கு அடிமைப்பட்டுப் போகும் பெண்கள் சமூகத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது, அவர்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழிகாட்டிக் கொடுப்பதும், பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களை எமது நிறுவனத்தில் இணைத்து அவர்களின் நிம்மதியான வாழ்வுக்கு ஏற்றவகையில் செயற்றிட்டங்களை ஏற்படுத்துவதும் ஆகும்.

ஆண்கள் சமூகம், பெண்களை நடத்தும்விதத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது அவா. ஆனால்- எமது முயற்சியின் கொள்ளளவு, எவ்வளவு பலாபலன்களைப் பெற்றுத்தரும் என என்னால் அறுதியிட்டுக் கூறமுடியாது. பெண்களின் விடுதலை, சுதந்திரம் என்பவற்றுக்காக பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினராகிய நாம் எம்மாலான சகல முயற்சிகளையும் எடுப்போம், எடுத்துக் கொண்டே இருக்கின்றோம். இதற்கு பெண்கள் சமூகம் எமக்குப் பூரணமான ஆதரவினை வழங்கினால்- எமது குறிக்கோளும், நோக்கமும் நிச்சயம் வெற்றி பெறும். பெண்களை இரண்டாந்தர நிலையில் இருந்து விடுவிப்பது மட்டுமல்லாமல், பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் பிரதான கவனம் செலுத்தி வருகின்றோம். இவ்வாறான இலக்குடனேயே செயற்படுகின்றோம்.

★ **கேள்வி:- உங்கள் திட்டங்கள் தொடர்பாக எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்கள்?**

★ **பதில்:-** ஒவ்வொரு பெண்ணும் அறிவு, துணிவு, தன்னம்பிக்கை ஆகியவற்றைப் பெற்று என்னால் முடியும் என்று தானே தனித்து, தன்னை வழிப்படுத்தி, செயலாற்றும் நிலையில் அவர்களை வளர்த்தெடுப்பது எமது தலையாய பணியாகும்.

ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமமாக சகல துறைகளிலும் சமத்துவம் பெற்று வாழ வழிகாண வேண்டும் என்பதே எமது இலட்சியம். இதனை வென்றெடுக்கப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவற்றினை நடைமுறைப்படுத்தி வருகிறோம். முதலில் நாம் கொள்கையளவில் மட்டுமே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றோம். இவற்றை- ஆய்வுக் கருத்தரங்கு, ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தி வருகின்றோம்.

★ **கேள்வி:- தங்களின் கண்ணோட்டத்தில் பெண்களின் செயற்பாடு எப்படி உள்ளது?**

★ **பதில்:-** சமூக நிறுவனங்களில் பெண்கள் கூடிய பங்காற்ற முன்வரவேண்டும். ஆனால் பெண்கள் அவ்வாறு முன்வருவது மிகக்குறைவாகவே உள்ளது. இதுவே, பெண்கள் சமூகத்தின் விடிவுப்பாதையின் முக்கிய தடைக்கல்லாக உள்ளது. இந்த நிலை என்று மாறுகின்றதோ அன்றுதான் பெண்களுக்கு முதலாம்படி விடிவு கிடைக்கும் என நம்புகிறேன்.

அடக்கு முறைக்குள் அடங்கிக் கிடப்பதை விடுத்து அவற்றின் விலங்கினை உடைத்துக் கொண்டு வெளியேவரவேண்டும். ஆனால், பெண்கள் அப்படி இல்லை. எழுதப்படாத பாமரச்சட்ட திட்டங்களுக்குள் கட்டுண்டு கிடக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும், பெண்கள் அதை மாற்ற முன்வரவேண்டும். போராட்டம் இன்றி வெற்றி, சுதந்திரம், சுபீட்சம் கிடைக்காது. இதனை பெண்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

★ **கேள்வி:- சமுதாயத்தில் பெண்களின் சிந்தனை எப்படி உள்ளது?**

★ **பதில்:-** குடும்பச் சுமைகளுக்கு அப்பால் பெண்களின் விடுதலை இருப்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும். கணவனைத் துணையாக அல்லது பங்காளியாக எண்ணிக் கூட்டுறவு அல்லது கூட்டுணர்வுடன் சமூகப்பணிகளில் ஈடுபட வேண்டும். இந்தச் சிந்தனை சிநேகபூர்வமாக முதலில் கணவன்மாருக்கு ஏற்படவேண்டும். பெண்களுக்கு இயல்பான விடுதலை கிடைக்கவேண்டும். பெண்கள் தம்மைதாமே சிறுமைப்படுத்தக்கூடாது. இதனால் எம்மை நாமே அடிமைப்படுத்தி விடு

வீட்டுக்குள் சமத்துவம் ஆண், பெண் புரிந்துணர்வு, ஆணுக்குப் பெண் அடிமை அல்ல என்ற மனிதாபிமான அடிப்படையில் எழும் சரிநிகர் மனப்பாங்கு உடனடியாக உருவாக வேண்டும்.

பிற்போக்குச் சிந்தனையிலும், மரபுவழிக் கோட்பாட்டிலும் சிலர் கட்டுண்டு கிடப்பது பெண்கள் சமூகத்தின் விழிப்புணர்ச்சிக்குத் தடையாக உள்ளது. மாறிவரும் உலகில் மாற்றங்கள் தேவை. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" காலத்தின் நீரோட்டத்திலேயாகும். ஆகவே, பெண்களின் பிற்போக்குச் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

★ **கேள்வி:- நீங்கள் இறுதியாக யாது கூற விரும்புகிறீர்கள்?**

★ **பதில்:-** சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நாம் ஏதோ ஒரு வகையில் மறுவாழ்வு கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களை விதவை என்றோ, வாழாவெட்டி என்றோ பட்டம் சூட்டி சமூக, கலாசார நிகழ்வுகளில் இருந்து ஒதுக்கிவிடுவதும் மாற்றப்படவேண்டும்.

இத்துடன் அவர்களின் வாழ்வு முடிந்துவிட்டது என முடிவெடுப்பதும், ஒரு பெண்ணாகப் பிறந்த மனித ஜீவனால் தாங்கமுடியாத வேதனையாகும். இதனைச் சமூகம் புரிய வேண்டும். அவள் மனதுக்குள்ளே எண்ணி எண்ணிப்புழுங்குவது எவருக்குமே தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைக்காட்டிக்கொள்ள எமது சமூகம் முன்வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும். இதனை மாற்ற எழுத்தாளர்களும், ஊடகங்களும் முயற்சி எடுக்கவேண்டும் என்பதே எனது கருத்து. இதற்கு ஆண் சமுதாயம் தடையாக இருக்கக்கூடாது.

**நேர்காணல்: — ச.சசிகரன்**

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்




சிந்தி,

உனது கடிதம் கிடைத்தது. நீ அமலாவைச் சந்தித்தது பற்றியும் ஆனால் நீ எதிர்பார்த்தவாறு அவளது மனம் இலகுவில் மாறவில்லையென்றும் எழுதியிருந்தாய். உனது முயற்சி வெற்றி பெறவில்லையென கவலைப்பட்டிருந்தாய்.

சொற்களால் மலினப்படுவதையே பாரதூரமாகக் கருதும் பண்பாட்டுச் சூழலில் நாம் வளர்ந்து விட்டோம். அப்படிப் பட்ட பெண்கள் பொய் வதந்திகளைக் கூட இலகுவாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

எமது பண்பாடு போற்றப்பட வேண்டிய ஒன்று. ஆனால் பொய்மைக்கும் பயந்தொதுங்கும் மனப்பாங்கு தேவையற்றதென்பதை நாம் உணர வேண்டும். ஒரு காலத்தில் பெண் குழந்தைகள் ஓரளவு வளர்ந்ததும் பாடசாலைக்குக் கூடச் செல்வது தவறென்ற எண்ணம் எம் மத்தியில் இருந்தது.

இன்று பல்கலைக்கழகம் வரை சென்று பட்டங்கள் பெற்று பெண்கள் பல பதவிகளும் வகிக்கிறார்கள். இது-பெண்களின் பண்பையோ எமது பண்பாட்டையோ குறைத்து விட்டதென்றோ, கெடுத்து விட்டதென்றோ கூற முடியாது.

ஒருவர் முன்னேறும் போது, ஊக்கமளிப்பவர்கள் பத்துப் பேரென்றால் அதைக் கெடுக்க முயல்பவர்கள் தொண்ணூறு பேராக இருக்கிறார்கள். இப்படிக் கெடுப்பவர்கள் பல்வேறு வகைகளில் தடையை ஏற்படுத்த முயல்கின்றனர்.

வதந்தி பரப்புவது முதலாக அவர்கள் ஏற்படுத்தும் தடைகளனைத்தையும் தூசாக மதித்து, கவனத்திலெடுக்காது எதிர் நீச்சல் போடும் திறமை எமக்கு வேண்டும். முக்கியமாகப் பெண்களுக்கு வேண்டும்.

கல்லெறியும் பொல்லடியுமில்லாது போனாலும் சொல்லடிப்படாது எவருமிருக்க முடியாது. அவற்றை எதிர்கொண்டு, சமாளித்து, ஜீரணித்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

இப்படி எழுதும் எனக்குக் கூட சில சமயங்களில் இதைச் செயற்படுத்தும் மனத்தைரியம் குறைந்து போகலாம். சொல்வது சுலபம். செயற்படுத்துவது கடினம்.

இத்தகைய நேரங்களிலேதான் உதவும் உறவுகள் தேவைப்படுகின்றன. அத்தகைய உறவுகளாக நாம் செயற்பட முன் வர வேண்டும். அமலாவுக்கு அத்தகைய உறவாக நீ இருக்க வேண்டும் என்பதையே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நீ முயன்றால் படிப்படியாக அவளை ஊக்கமும், உற்சாகமும் மிகுந்த அதிகாரியாக மாற்றலாம்.

இதை எழுதும் போது எனக்கு மற்றுமோர் எண்ணமும் தோன்றுகிறது. பெண்களது முன்னேற்றத்திற்குத் தேவையானவை பல உள்ளன. சிலருக்கு தொழிற்பயிற்சி தேவைப்படுகிறது. தொழில் பயின்றவருக்கு நிதிவளம் தேவைப்படுகிறது. பலவகை ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. இப்படி தேவையானவை பல.

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும் உறவுகளும் எல்லா ஊர்களிலுமே தேவைப்படுகிறார்கள்.


எனவே -ஊர்தோறும் செயற்திறன்மிக்க, உதவும் மனப்பாங்கு கொண்டோரிணைந்து அமைப்புக்களை உருவாக்கி பெண்களின் முன்னேற்றத்திற்கும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவலாம் என்பது எனது அபிப்பிராயம்.

இது பற்றிச் சிந்தித்து, செயற்படுத்த உன் கருத்துக்களைத் தெரிவிப்பாயென எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

யோசி

## சமையல் குறிப்புக்கள் சில



✧ உருளைக்கிழங்கைப் போல் பீற்றூட்டையும் முழுதாக அவியவைத்து, பின்னர் தோலை உரித்து,துண்டு துண்டாக வெட்டி இலகுவாகச் சமையல் செய்யலாம்.

✧ மரவள்ளிக்கிழங்கு பொரியல் செய்யும் போது, பச்சையாக வெட்டிய கிழங்குச் சீவலை, 5 நிமிடம் ஆவியில் வேகவைத்து எடுத்த பின் பொரித்தால் மொறு மொறுப்பாக இருக்கும்.

✧ பயத்தம் பருப்பு அவித்த நீரில் ரசம் வைத்தால் மிகச் சுவையாக இருக்கும்.

✧ கீரை வகைகள் சமைக்கும்போது எந்தக் கீரையானாலும் கடைசியில்தான் உப்பு சேர்க்க வேண்டும். அப்போதுதான் கீரை சுவையாக இருக்கும்.

# கவிதைச்சோலை

## காதல்

மண்ணின் மீது மழைக்குக்- காதல்
கடலின் மீது அலைக்குக்-காதல்
வானத்தின் மீது முகிலுக்குக்-காதல்
மரத்தின் மீது இலைக்குக்-காதல்
மலர்களின் மீது வண்டுக்குக்-காதல்
பிள்ளைகளின் மீது பெற்றோர்க்குக்-காதல்
மாணவர்களின் மீது ஆசிரியர்களுக்குக்-காதல்
தெய்வத்தின் மீது பக்தனுக்குக்-காதல்
நட்பின் மீது நண்பனுக்குக்-காதல்
உறவினர்கள் மீது உள்ளத்திற்குக்-காதல்
அன்பான இரண்டு உள்ளங்கள்
அன்போடு பரிமாறும் உறவுக்கும் பெயர்-காதல்
இரண்டு உள்ளங்கள் ஒன்றியன்றி அன்னியோன்னியமாக
நிற்கும் நிலை-காதல்
வாழ்க்கை மலராக இருக்கும் போது -
அதில் ஊறும் தேன்-காதல்
எங்கும் எதிலும் எப்போதும் என்றும்
காதல்... காதல்... காதல்...

சு.சுகதினி
இணுவில்

## விழிப்பு

சமையல் செய்யும் இயந்திரமாக
ஆண்டுகள் பல தூங்கிக் கிடந்தாய்
உன்சிறு வீடே உனதுலகானது
உப்பும் புளியுமே பிரச்சினையானது
உனது வாழ்நாள் இவ்வாறாக
உளுத்துப் போனது
உன்னைச் சுரண்டி வாழ்ந்தது உலகம்
உன்னை நினைத்து அழுதவர் கொஞ்சம்

ஆனால் -
தாயே! நீ இன்று நீ விழித்துக் கொண்டாய்
தெருவில் இறங்கி ஊர்வலம் வந்தாய்
அன்னையருடன் அணி
திரண்டு விட்டாய்

அகப்பை பிடித்த கைகளில் பதாகை;
போதும் கொடுமைகள் என்ற முடிவு
பிள்ளைகள் பற்றி நெஞ்சில் ஏக்கம்
கண்களில் சோகம்
நடையினில் வேகம்
இறுதியில் வெற்றி உனக்கே தாயே!

உலகில் பாதி பெண்கள் ஆனதால்
உங்கள் பலத்தை உணர்ந்து விட்டீர்கள்
நித்திரை செய்த காலம் முடிந்து
நீதியைக் கேட்கும் காலம் வந்தது
வீட்டுக்கு வீடு அன்னையர் வந்தனர்
உன்பலம் உணர்ந்து
நீ நிமிர்ந்த வேளை
தாயே! எமக்கு விடிவு வந்தது.

- சன்மார்க்கா

# ஆரோக்கியத்திற்கு இயற்கை உணவு!



நாம் உண்ணும் உணவு உடலில் மூன்று முக்கிய பணிகளைச் செய்கிறது.

❖ உடலுக்குத் தேவையான ஆற்றலைக் கொடுக்கிறது.

❖ உடல் வளர்ச்சியைக் கொடுக்கிறது.

❖ நோய் எதிர்ப்பு ஆற்றலைக் கொடுக்கிறது.

உடலுக்குத் தேவையான ஆற்றலைப் பெற சராசரியாக ஒருவருக்கு சுமார் 3200 கலோரிச் சத்துக் கொண்ட உணவு தேவைப்படும் நிலையில், வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள மனிதன் சராசரியாக சுமார் 2100 கலோரிச்சத்து நிறைந்த தானிய வகைகளையாவது உண்ணவேண்டும்.

உடல் வளர்ச்சியைப் பெற- புரதச்சத்து மிகுந்த பருப்பு, இறைச்சி வகை உணவுகளை உண்ணவேண்டும்.

நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெற- உயிர்ச்சத்துக்களும, தாது உப்புக்களும் நிறைந்த உணவு வகைகள் அவசியம். இவற்றை- கீரை வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை உண்பதன் மூலம் பெறமுடியும். நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்குத் தேவைப்படும் காய்கறிகளின் அளவான 300 கிராமில் குறைந்தது 125 கிராம் கீரை வகைகளாக இருக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு 1-3 வயதுடைய குழந்தைகளுக்கு 50 கிராம் கீரையும், 10-15 வயது வரை உள்ளவர்களுக்கு 100 கிராம் கீரையும், பெரியவர்களுக்கு-150 கிராம் கீரையும் தேவை.

❖ உயிர்ச்சத்து 'சி'- பல், எலும்பு முதலிய உறுப்புக்கள் வளர்ச்சியடைய உதவுகிறது. மேலும் நோய் எதிர்ப்பு ஆற்றலையும் கொடுக்கிறது.

❖ விற்றமின் 'பி' சத்து- நரம்புத் தளர்ச்சி, வாய்ப்புண், உதட்டோரங்களில் ஏற்படும் 'மைனா வாய்' போன்றவை வரா மல் தடுக்கிறது. நார்ச்சத்து மலச்சிக்கலைத் தடுக்கிறது.

எனவே இதில் காணும் கீரைகளில் ஏதேனும் ஒன்றை- ஒவ்வொரு நாளும் உணவில் சேர்த்து நோயின்றி வாழலாம்.

## முள்ளங்கிக்கீரை

குளிர்ச்சியை உண்டு பண்ணும். கல்லீரல் நோய் நீக்கி, இதயத்திற்குப் பலம் தரும். சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்கள், வயிறு எரிச்சல், இருமல் ஆகியவற்றைக் குணப்படுத்தும்.

கீரையைப் பருப்புடன் சேர்த்து சம்பல் செய்யலாம். இலையுடன் கச்சானை இட்டு வதக்கியும் உண்ணலாம. இலையைப் பச்சையாகவும் சாப்பிடலாம். முள்ளங்கிக் கீரைச் சாற்றை எடுத்து 15 நாட்கள் பருகிவர, சிறுநீரகம் சம்பந்தமான நோய் நீங்கும்.

## கரிசலாங்கண்ணி (வெள்ளை)

இலையை வாயிலிட்டுப் பச்சையாக மென்றால், பல் நோய்கள் நீங்கும். இலையை மை போல அரைத்து, காய்ச்சிய பாலில் கலந்து காலையில் பருகினால் காமாலை குணமாகும். இதன் சாற்றை சம அளவு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சித் தைலமாக்கித் தேய்த்தால் தலைமுடி கருமையாகும். நன்கு வளரும். தலைவலி, கண் எரிச்சல் நீங்கும். உண்போர் உடல் நாளடைவில் பொன்னிறமாகும். நல்ல உடல் வனப்பு பெறும்.

வெள்ளை கரிசலாங்கண்ணி அதிக சத்துக்களைக் கொண்டிருந்தாலும் மஞ்சள் கரிசலாங்கண்ணிதான் மஞ்சள் காமாலையைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டுள்ளது. கையாந்திகரை, பொற்கொடி எனப் பல பெயர்கள் இதற்கு உண்டு.

## பசளிக்கீரை

இககீரையைப் பருப்புடனும், பாசிப்பயற்றுடனும் வேக வைத்துச் சாப்பிடலாம். கடையல் செய்யலாம், குழம்பு தயாரிக்கலாம். குளிர்ச்சியை உண்டாக்கி உடல் சூட்டைத் தணிக்க வல்லது. நோய் தடுப்பு ஆற்றல் மிகுதியாக உண்டாக்கும். சிறுநீர்க்கடுப்பு, ருசியின்மை, வாந்தி ஆகிய பிணிகளை நீக்கும். இலையை வதக்கிக் கட்டினால் சீள்ப்பிடித்த காயங்களை ஆற்றிடும். தாதுவைக் கட்டியாக்கி ஆண், பெண் உறவில் நிறைவை உண்டாக்கும். இதில் பச்சை நிறக்கொடி, சிவப்பு நிறக்கொடி என இரு வகைகள் உண்டு. இக் கீரையை சளி உடையவர்கள் சாப்பிட்டால் சளி அதிகமாகிவிடும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# CHINESE FAN



**தேவையான பொருட்கள்**

கேக் , ஐசிங் சுகர், மாஜரின், ஜெலற்றின், சுடுநீர்

**செய்முறை:-**

**Chinese Fan** ஐசிங் செய்வதாயின், முதலில் உறுதியான **Board** இல் கேக்கினை திருப்பிப் போட்டு **Cutting** ஐ வைத்து வெட்டவும். பின்னர், சுடுநீர் கொண்டு அழுத்தும் கத்தியால் அழுத்தவும். பின், பக்கங்களுக்கு **Cream**மாக அடித்த மாஜரினைப் பூசவும். **Fan** இன் கீழ் வளைவுகளுக்கும் கிறீமாக அடித்த மாஜரினைப் பூசவும். **Fan** இன் மேற்பகுதி **Soft Butter** குழைத்து **Pink** கலர் கலந்து **Basket** நொசலிங்கால் வளைத்து வளைத்து ஐந்து தடவை போடவும். அதே போன்று, **Soft Butter** குழைத்து, முதல் குழைத்த **Pink** கலரை விடக் கலரை நன்கு குறைத்து, குழைத்து ஐந்து தடவை **Basket** நொசலிங்கால் போடவும். பின், **Fan** மேற்பரப்பு மிகுதிக்கும் கைபிடிக்கும்- **Butter** கலர் **Soft Butter** குழைத்து, **Basket** நொசலிங்கால் போடவும். கைபிடியுடன் பக்கங்களுக்கும் **Butter** கலரினால் போடுதல் வேண்டும். விரும்பினால், மேற்பரப்பின் பொருத்திற்கும், மேல், கீழ் விளிம்பிற்கும் **Star** நொசலிங்கால் போடலாம். **Rose** வைப்பதாயின் **Fan** இன் மேற்பரப்பில் நடுவில் அல்லது **Board** இன் ஒரு பக்கத்தின் மூலையில் வைத்து அலங்கரிக்கலாம். திகதி, பெயர் என்பவற்றை **Board** இல் எழுதலாம்.

# துணியில் பூச் செய்வது எப்படி?



## ஜப்பான் றோஸ்

**தேவையான பொருட்கள்**

கஞ்சியிடப்பட்ட பப்பிளின் துணி- மஜந்தா 1/2m
பச்சை 1/2m

றூள்
பஞ்சு
பைண்டர் கம்
பச்சைத் துணி
கட்டுக் கம்பி
flower tape

**செய்யும் முறை:**

ஜப்பான் றோஸ் செய்வதற்கு கஞ்சியிடப்பட்ட பப்பிளின் துணியில் பெரிய பூ இதழ் Cutting ஐ வைத்து 3 வெட்டி எடுக்கவும். இவ் இதழின் நுனியல் எல்லாப் பக்கமும் வெட்டி விடவும். இதழின் நடுப்பகுதியைச் சிறிது வெட்டி விடவும்.இதழின் மேல் நடுத்தர குண்டு றூள் பண்ணவும். பின் அடுத்தபக்கம் திருப்பி பெரிய குண்டு றூளால் றூள் பண்ணவும். இவ்வாறு சிறிய இதழ் இரண்டு வெட்டி நடுத்தர குண்டால் றூள் செய்து, அதே பக்கத்திலேயே பெரிய குண்டால் றூள் பண்ணவும். பின் கட்டுக்கம்பியின் நுனியை வளைத்துப் பஞ்சு வைத்து ஒட்டி, அதனை நடுவில் வைத்து சிறிய இதழகளை முதலில் ஒட்டியும் பின் பெரிய இதழ்கள் மூன்றையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒட்டிய பின், புல்லிகள் மூன்றையும் பச்சைத் துணியில் வெட்டி அப்பூவின் அடிப்பாகத்தில் சம இடைவெளியில் வைத்து மூன்றையும் கட்டவும். பின்னர் கட்டுக் கம்பிக்கு Flower tape சுற்றவும். மேற்கூறியவாறு சிறிய இதழ் இரண்டு வெட்டி, றூள செய்து மொட்டு செய்து, மூன்று புல்லி வைத்து கட்டவும். எல்லா கம்பிக்கும் flower tape சுற்றவும். இலைக்கு Cutting வைத்து வெட்டி கம்பிக்கு flower tape சுற்றி, கம்பியில் இலையை வைத்து ஒட்டி கைக்குட்டையால் றூள் செய்யவும். இவ்வாறு 15 பெரிய பூக்களும், 5 மொட்டுக்கள், இலைகள் போன்றவறறைச் செய்த பின் இவற்றை ஓர் ஒழுங்கு முறையில் பூ, மொட்டு, இலை ஆகிய ஒழுங்கில் செண்டாகப் பெறமுடியும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஆடு நனைகிறதே என*
*ஓநாய் அழுததாம்.*

- தமிழ்ப் பழமொழி.

# நமது நோக்கு

## சொல்வதற்கும் ஒரு தகுதி வேண்டும்!

இலங்கை இனப்பிரச்சினையானது சர்வதேச அரங்கிற்குச் சென்றுள்ளமை தொடர்பாக - முன்னாள் நிதியமைச்சரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரொனி டி மெல் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள்- கவன ஈர்ப்பைப் பெறுவனவாக அமைந்துள்ளன.

இனப்பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டதால் பிரச்சினைகள் அதிகமாகத் தோன்றுமெனவும்,

சைப்பிரஸ், கொங்கோ, எரித்திரியா, சியாரா லியோன் போன்ற நாடுகள் இன்று எதிர்நோக்கும் நிலையை, இலங்கையும் அடைந்து விடக்கூடாது எனவும் கூறியுள்ள ரொனி டி மெல் -

உலகமும், மேற்கு நாடுகளும் - இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும்நிலை உருவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

ரொனி டி மெல்லின் இக்கருத்துக்கள், எதிரணியிலுள்ள சிங்களத் தலைவர்கள் பெரும்பாலானோரின் தற்போதைய நிலைப்பாட்டை பிரதிநிதிப்படுத்துவதாகவே உள்ளது. ஆனால் - இக்கருத்துக்களின் பின்னால் இருக்கும் அச்சநிலையும், எச்சரிக்கையும் எதனாலுண்டாகின்றது என்பதே - இங்கு முக்கியமான, ஆராயவுக்குரிய விடயமாகும்.

வரலாற்று ரீதியாக - இலங்கைத் தீவின் ஆதிக்கமும், அரசியல் அதிகாரமும் தம்வசமே உள்ளது என்ற பேரினவாதச் சிந்தனைக்கு விழுந்த அடியின் நேரடிப் பாதிப்பைப் புலப்படுத்துவதாகவே - இக்கருத்துக்களின் அடித்தளம் அமைகின்றது.

தமிழர்களும் தேசிய இனத்தவரே என்பதை ஏற்க மறுத்து - தமிழினத்தை காலத்திற்குக்காலம் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கியும், தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியும் நடத்தி வந்த இனவாத அரசியல், செல்லுபடியாகாமல் போகின்றதே என்ற ஆதங்கமும் இக்கருததுக்களில் தொனிப்பதை அவதானிக்கலாம்.

தமிழர்களின் உரிமைகளை மறுத்து - அவர்களுக்கான நியாயமான தீர்வொன்றினைத் தர முன்வராதது மட்டுமல்லாமல் - தமிழினம் தனது உரிமைகளை வேண்டிப் போராடியபோதெல்லாம் - அரசாங்க இயந்திரத்தின் முழுப் பலத்தையும் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்ட - ஆதிக்கத்திமிர், இன்று கண்முன்னாலேயே தளர்ந்து போவதையே ரொனி டி மெல்லின் ஆற்றாமைக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளும், அவர்களின் விடுதலைப் போராட்டமும் - இன்று பேரினவாதத்திற்கு அப்பால், பிராந்தியச் செல்வாக்குகளுக்கப்பால் - சர்வதேச அரங்கில் பேசப்படும் ஒன்றாக விஸ்வரூபம் எடுத்திருப்பது - இனப்பிரச்சினையின், அது காத்து நிற்கும் தீர்வின் - பரிமாணத்தினை சர்வதேசமயப்படுத்தியிருக்கிறது.

இது - தமிழினம் எதிர்பார்த்து நிற்கும் ஆட்சி அதிகாரத்திற்கு உலகநாடுகளின் ஆதரவையும், நியாயத்தின்பாலான உறுதியையும் தருவதோடு - இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டியதன் அழுத்தத்தையும் உருவாக்கயிருக்கறது.

இத்தகைய நிலை - இதுவரைகாலமும் தமிழினத்தை அடக்கி ஒடுக்க முயன்ற சிங்களத் தலைமைகளுக்கு கசப்பானதாக, விருப்பத்திற்கொவ்வாததாக இருப்பதில் வியப்பில்லை.

மறுவழியில் - சிங்களத் தலைமைகள், தமிழர்களுககான ஆட்சியதிகாரத்தை கடந்த காலங்களில் வழங்க முன்வந்திருந்தால், தமிழர்களை - தமக்குச் சமமானவர்களாக, தேசிய இனமாக அங்கீகரித்து, அவர்களுக்குரிய மதிப்பை வழங்கியிருந்தால் - இவ்வாறு 'கவலைபடும்' சூழலும் எழுந்திருக்காது.

அவ்விதம் ஏதும் செய்யாமல் - இன்று அதிகாரப் பலமும் கைநழுவிப்போகவும், பேரினவாதம் சர்வதேச அரங்கில் மேற்கொண்டும் ஏடுபடாது எனத்தெரியவும்-

'நாட்டைப் பாதுகாப்பவர்களாக' வேடம் புனைவதை என்னவென்று சொல்வது?

அதிலும் - கடந்த காலத்தில், தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்காக - உலககெங்கிலும் ஆயுதங்களையும், ஆலோசனைகளையும் பெருவாரியாகப் பெற்றுப் போரினைத் தீவிரமாக்கியவர்கள் -

இராணுவத்திற்கு - அமெரிக்க விசேட படையணிகளின் உதவிகளைப்பெற்றும், பிரிட்டன், இஸ்ரேல், தென்னாபிரிக்கா என உலகெங்கிலிருந்தும் நாசகார ஆயுதங்களை வாங்கியும் குவித்தவர்கள்-

போர்க்காலங்களில் பணத்தினைப் பெற சர்வதேசம் எங்கும் ஓடியோடி உதவி வாங்கியவர்கள் -

திருகோணமலையையும், இரணவெலவையும் - அந்நிய இராணுவத்தளங்களுக்காக, ஒறறுவேலைகளுககாக தாரை வார்க்கவும் துணிந்தவர்கள் -

இன்று சமாதானத்திற்காகவும் தமிழர்களுக்கான நியாயமான தீர்வுக்காகவும் - சர்வதேசம் தலையிடுவதைக்கண்டு-எச்சரிப்பதுதான் மிக வேடிக்கையானதாகும்.

# பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் மீது ரொனி டீ மெல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தை இதுவரைகாலமும் சர்வதேசமயப்படுத்துவதில் இருந்து பாதுகாத்து வந்தோம் - ஆனால், அரசாங்கம் இப்போது இந்த விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தி விட்டதாக முன்னாள் நிதியமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான ரொனி டீ மெல் தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்துவதால் நாம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். சைப்பிரஸ், கொங்கோ, எரித்திரியா, சியரா லியோன் போன்ற நாடுகளின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டதால் அந்த நாடுகளில் முன்னர் இருந்ததைவிட மோசமான பிரச்சினைகள் ஏற்பட்டன.

இலங்கையின் பிரச்சினைகளில் ஏனைய நாடுகளைத் தலையிட அனுமதிப்பது அந்த நாடுகளின் ஆதிக்கத்துக்கு வழிவிடும். உலகமும் மேற்கு நாடுகளும் இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவிடும். எனவே, அரசாங்கம் இப்பிரச்சினையைச் சர்வதேசமயப்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என ரொனி டீ மெல் மேலும் தெரிவித்தார்.

# வருடம் தோறும் 20 ஆயிரம் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் உள்வாங்கத் திட்டம்

## அடுத்த ஐந்து வருடங்களில் நடைமுறைக்கு

(கொழும்பு)

அடுத்த ஐந்து வருடங்களுக்குள் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவோரின் தொகையை 20 ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது, வருடாந்தம் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு சுமார் ஒரு லட்சம் பேர் தகைமை பெறுகின்ற போதும், 12 ஆயிரம் பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.

இதனால், உள்வாங்கப்படும் மாணவர்களின் தொகையை 20 ஆயிரமாக அதிகரிக்க, அடுத்த ஐந்து வருடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை - பாடசாலைகள் மட்டத்தில் பிரபலமாகவுள்ள பாடசாலைகளில் ஏற்படும் இடநெருக்கடிகளைக் குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதன்படி 525 பாடசாலைகளுக்கு, பிரபல பாடசாலைகளில் உள்ள வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு, அவற்றை பிரபல பாடசாலைகளுடன் இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைவிட, 700 பாடசாலைகளைத் தரமுயர்த்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# தமிழ்ச் சிறுமியைக் கொடுமைப்படுத்திய பிரபல அரசியல்வாதியின் மகள்!

## நீதிமன்றினால் 3 வருடச் சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

தமிழ்ச் சிறுமி ஒருவரை வீட்டு வேலைக்கு அமர்த்தி - அவரைக் கொடுமைப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரபல அரசியல்வாதி நந்தா எல்லாவெலவின் மகளுக்கு நீதிமன்றம் மூன்று வருடச் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

நிரோஷா இராமலிங்கம் என்ற 15 வயதுச் சிறுமியை வீட்டுவேலைகளைச் செய்வதற்காக வேலைக்கு அமர்த்தி, அவரைச் சித்திரவதை செய்ததாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இரத்தினபுரியைச் சேர்ந்த முன்னாள் எம்.பியான நந்தா எல்லாவெலவின் மகள் பூபா விசாக வீரசிங்கவுக்கே சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது அத்துடன், சிறுமிக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா நஷ்டஈடும் வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

சிறுமியை அடித்துக் கொடுமைப்படுத்தியது, கத்தியை நெருப்பில் காய்ச்சி எரிகாயம் ஏற்படுத்தியது உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் விசாகா வீரசிங்க மீது சுமத்தப்பட்டன.

அத்துடன், நாள் முழுவதும் வீட்டு வேலைகளைச் செய்வித்தபோதும் மாதமொன்றுக்கு 500 ரூபா ஊதியமே வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தண்டனை விதிக்கப்பட்ட விசாகா வீரசிங்கவின் தந்தை நந்தா எல்லாவெல, சுதந்திரக்கட்சியின் முன்னாள் எம்.பி என்பது குறிப்பிடத்தக்கது. விசாகா வீரசிங்கவின் தாய், சகோதரர் நாலந்த எல்லாவெல ஆகியோரும் எம்.பிக்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு அபிவிருத்தி குறித்து ரணிலுடன் ஹக்கீம் பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில், கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான இந்தப் பேச்சுக்களில், வட - கிழக்கு அபிவிருத்திக்கு என கிடைத்துள்ள நிதியைப் பங்கீடு செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பேச்சுக்களின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் எம்.எஸ். தௌபிக், எச்.எம்.எம். ஹரீஸ், நிசாட் பதியூதீன் ஆகியோர் உடனிருந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுள் ஏற்பட்ட பிளவுக்குப் பின்னர், அமைச்சர் ஹக்கீம், பிரதமர் ரணிலை அடிக்கடி சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# முப்படையினரின் சீருடைக்கு 1 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

முப்படையினருக்குமான சீருடைக் கொள்வனவுக்கென ஒரு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'சலுசல' நிறுவனத்திடம் கொள்வனவுக்கான உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை, பாடசாலைச் சீருடைகளுக்கென 600 மில்லியன் ரூபாவும், தாதிமாரின் சீருடைக்கென 500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குறைதீர் மன்றம்

கூட்டுறவுப் பரிசோதர்களுக்கான பரீட்சை 2001 ஆம் ஆண்டு கார்த்திகையில் நடைபெற்று, 2002 சித்திரையில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. அதில் 115 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு நியமனம் கிடைக்கும் எனத் தகவல்கள் வெளிவந்தன. 8 மாதங்கள் கடந்தும் எவருக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் எதுவும் நடைபெறவில்லை. இது தொடர்பாக என்ன நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாண அதிகாரிகள் எடுக்கிறார்கள் என்பது பற்றித் தங்கள் குறைதீர் மன்றம் மூலமாக தெரியப்படுத்த முடியுமா?

*எஸ்.ரமேஷ்,*
*டச்சு வீதி,*
*உடுவில்.*

**'நமது ஈழநாடு'**

தங்கள் விடயத்தினை பற்றி வடக்கு - கிழக்கு மாகாண சபையினருடன் தொடர்பு கொண்டபோது - மாகாண சபைக்கு, திறைசேரி எவ்வித நியமனங்களையும் கொடுக்காது இடைநிறுத்தும்படி கோரியதற்கிணங்க தாங்கள் நியமனங்களை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவித்தனர். தற்பொழுது, வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு விசேடமாக வெற்றிடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இதற்கிணங்க, மாகாணசபைக்கு நிதி கிடைத்ததும் நியமனங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படும் என மாகாணசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கற்றலோடு கற்பித்தலும் ஒரே நேரத்தில் நடைபெறும் செயற்பாடே தொலைக்கல்வி

**மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான ஏகபிரதிநிதி நிறுவனமான அம்பிகா உயர்கல்வி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் அ.சிவராஜா அண்மையில் யாழ். வந்திருந்தார். அவருடனான நேர்காணல் இது.**

*கேள்வி:-* நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருப்பதன் நோக்கம் என்ன?

*பதில்:-* யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் எல்லாவற்றையும் அறிந்ததனால், அவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் - அதாவது பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு தொடர்பான எமது நிறுவனத்துடனான செயற்பாடுகள் பற்றியதான ஒரு அறிமுகக் கருத்தரங்கை நடாத்தி - அதன் மூலமாக, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் வெளிவாரி மாணவர்களாகத் தம்மை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, எமது சேவையையும் மேமபடுத்தும் நோக்குடனேயே இங்கு வருகை தந்துள்ளேன்.

*கேள்வி:-* எந்த வகையில் உங்கள் பணி இங்கு இருக்கப் போகின்றது?

*பதில்:-* மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் பட்டப்படிப்புக்களையும், பட்ட மேற்படிப்புக்களையும் வெளிவாரியாகச் செய்யக்கூடிய வகையிலே இங்கு விரிவுரைகளை ஒழுங்கமைத்துள்ளோம். அதை நடத்துபவர்கள் அம்பிகா உயர்கல்வி நிறுவனத்தினர்தான் - அதில் சோலைமலை இயக்குநராகவும், நான் நிர்வாகப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து வருகிறோம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் முதற்தடவையாக 6 பேர் பதிவு செய்து பட்டப்படிப்புக்களையும், பட்ட மேற்படிப்புக்களையும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். எனினும், விரிவாக அதனைப் பற்றிக் கருத்துக் கூறி செயற்படுத்தத் தற்போது தொடங்கியுள்ளோம். அதன் முக்கியமான பொறுப்பை எடுத்து நடத்தக் கூடிய வகையில், புதிய உயர் கல்லூரியைத் தெரிவுசெய்து, அதனிடம் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான விரிவுரை வகுப்புக்களை கடந்த 15 வருடங்களாக நடாத்தி வருகின்ற இக் கல்லூரியிடம் இப்பணியை ஒப்படைத்துள்ளோம். அவர்கள் இதை உத்தரவாதத்துடன் செய்து தருவார்கள். அத்துடன், இவை தொடர்பான மேலதிக விபரங்களையும் இக் கல்லூரியூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.




*கேள்வி:-* இக் கற்கை நெறிகளுக்கான செலவீனங்கள் எவ்வளவாக இருக்கும்?

*பதில்:-* இதற்கு நிறையச் செலவுகள் ஏற்படும் என்றில்லை. எல்லாமாக, துறை ரீதியான 46 கற்கை நெறிகள் இருக்கின்றன. இவற்றைக் கற்றுக்கொள்வதற்கு நிறையச் செலவுகள் ஏற்படும் என்ற வகையில் யாரும் பின்னிற்கவேண்டிய அவசியமும் இல்லை. இதற்கு, பட்டதாரிகள் மட்டுமன்றி வேறு தகைமைகள உள்ளவர்களும் உள்வாங்கப்படுவார்கள். பட்டப்படிப்பு என்றால் அது 3 வருடங்களைக் கொண்டதாகும். அந்த 3 வருடக் கற்கைநெறிக்கும் ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபா செலவாகும். பட்டமேற்படிப்பு என்றால் 25 ஆயிரம் ரூபாதான் செலவாகும். இது ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒரு சிக்கனமாகக் கருதக்கூடியதான கல்விமுறையாக இருக்கிறது.

*கேள்வி:-* உங்கள் நிறுவனம் இதை எவ்வளவு காலமாகச் செய்து வருகிறது?

*பதில்:-* இலங்கையில் முதலாவதாக, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த வகையில் பட்டப்படிப்புக்களையும், பட்ட மேற்படிப்புககளையும் ஆரம்பித்த ஒரே ஒரு நிறுவனம் அம்பிகா உயர்கல்வி நிறுவனமதான். இது, எங்களுடைய தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. காரணம், இலங்கை வாழ தமிழ்மக்களுக்கு இங்கு உளள கலவியை முன்னேற்றுவதற்கு கிடைக்கின்ற - இருக்கின்ற சந்தர்ப்பங்கள் குறைவு. அந்தவகையில் இவ்வாறாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்றவகையில், நாங்கள் அதற்கு வேண்டிய உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும்.


*கேள்வி:-* இக் கற்கைநெறிகளுக்கான விரிவுரை ஒழுங்குகளை எவ்வாறு செய்திருக்கிறீர்கள்?

*பதில்:-* இதில் தொலைக்கல்வி முறையில்தான் பாடநெறிகள் கையாளப்படும். தொலைக் கல்வியென்றால் கற்றலும், கற்பித்தலும் ஒரேநேரத்தில் சமாந்தரமாக நடைபெறுகின்ற செயற்பாட்டைத்தான் தொலைக் கல்வி என்போம். சாதாரண கல்வியாக அதாவது, முறைசார்ந்த கல்வியாக - இதுதான் இலங்கையில் ஆரம்பம் தொடக்கம் இருந்து வருகின்ற ஒரு கல்வி முறையாகும்.

இன்று உலகில் 167 நாடுகளுக்கு மேல் தொலைக்கல்வி மூலம்தான் கல்வியைப் போதிக்கிறார்கள். காரணம் என்னவென்றால், இந்தமுறையில் கல்வி கற்பது மாணவர்களுக்கு இலகுவாகவும், சிறந்த முறையில் கற்பிக்கவும் முடியும். இதன்மூலம், எத்தனைபேருக்கும் வசதி அளிக்கக்கூடிய வகையில் கற்றல் வாய்ப்புக்கள் இருக்கின்றபடியால், இன்று உலகப்பிரசித்தி பெற்ற ஒரு கல்வியாக இத்தொலைக்கல்வி இருக்கிறது. அந்தவகையில், தொலைக்கல்வி முறையில்தான் நாங்கள் இப்போது விரிவுரைகளை இலங்கையில் ஆரம்பித்துள்ளோம். தற்போது பட்டப்படிப்பை ஒவ்வொருவரும் பூர்த்தி செய்திருப்பது ஒரு முக்கியமான கல்வித் தகைமையாகும். இதனமூலமாக நல்ல சமுதாயத்தைக கட்டியெழுப்ப முடியும் என்பது எனது கருத்து.

*கேள்வி:-* அம்பிகா உயர்கல்வி நிறுவனத்தினூடாக இதுவரை எத்தனை மாணவர்கள் பட்டப்படிப்பை முடிததிருக்கிறார்கள்?

*பதில்:-* இலங்கையில் இதை 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 6 ஆம் திகதியே ஆரம்பித்தோம். தற்போது 700 இற்கும் அதிகமான மாணவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இதுவரை 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கற்று வெளியேறி இருக்கிறார்கள். எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு தற்போதுதான் இரண்டு வருடம் பூர்த்தியாகிற நிலையில் இருக்கிறபடியால், இதுவரை பட்டப்படிப்புக்களை எவரும் பூர்த்தி செய்து வெளியேறவில்லை. வேலைவாய்ப்புக்களைப் பொறுத்தளவில் சமூகவியல் பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களை சிபார்சு செய்ய முடியுமா, என்று பல நிறுவனங்கள் கேட்கின்றன. அந்த வகையில் இவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.


அ.சிவராஜா

*கேள்வி:-* இலங்கையில் இருந்தவாறு இக் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான பரீட்சை ஒழுங்குகள் எவ்வாறு இருக்கின்றன?

*பதில்:-* தற்போதைக்கு இப் பரீட்சைகள் கொழும்பில்தான் நடக்கும், இதுவரை எமது நிறுவனத்தால் ஒரு பரீட்சைதான் நடாத்தியுள்ளோம். இரண்டாவது பரீட்சை இம்மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது. ஏனைய இடங்களில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், இப் பரீட்சையை நடாத்துவதற்குரிய வழிவகைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அது ஒரு கஷ்டமான விடயமும்தான். இருந்தாலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் கலந்தாலோசித்துவிட்டுத்தான் இங்கு பரீட்சை நிலையங்களை விரிவுபடுத்தமுடியும். அதுவரை, யாழ்ப்பாணத்தில் இருந்து பட்டப்படிப்புகளுக்கும், பட்டமேற்படிப்புகளுக்கும் பதிவு செய்தவர்கள் பரீட்சைக்கு கொழும்புக்குத்தான் அழைக்கப் படுவார்கள்.

**நேர்காணல் - கலானந்தி**

# சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாகியுள்ள அழியாக் கழிவுகளான பிளாஸ்ரிக் பாவனை!

*நேற்றைய தொடர்ச்சி......*

★ இலங்கையைப் பொறுத்தவரை நாடு முழுவதற்கும் அல்லது நாட்டின் பிரதேச ரீதியில், சூழல் பாதுகாப்பு தொடர்பான சட்டக் கட்டுப்பாடுகள் குறைவாகவே உள்ளன. இச்சட்டக் கட்டுப்பாடுகளின் தளர்வினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு - பல்தேசியக் கம்பனிகள்- பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம், தமது இலாபத்தை உச்ச அளவில் பேணிக்கொள்ள முயல்கின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில், தற்போதைய சமாதானச் சூழல், புதிய சந்தை ஒன்றுக்கான வாய்ப்பினை இத்தகைய கம்பனிகளுக்கு பெற்றுககொடுத்துள்ளது. இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தும் கம்பனிகள், குடாநாட்டில் போட்டி போட்டுக்கொண்டு இந்த பொருட்களை சந்தைப்படுத்த - காட்சியறைகள், விற்பனை முகவர்கள், விளம்பரங்கள் போனற நடவடிக்கைகளில் அதிகளவு ஈடுபடுகின்றன.

★ சூழலியற் கல்வி தொடர்பில் குடாநாட்டு மாணவர்கள் மத்தியிலும் சரி, மக்கள் மத்தியிலும் சரி இக் கல்வி தொடர்பான அறிவு குறைவாகவே உள்ளது.

★ அழிவடையாப் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களினால் மண்வளம் பாதிப்படைகின்றது. இந்த மண்வளப் பாதிப்பு - மரங்கள், செடிகள், பயிரினங்கள் என்பவற்றைப் பாதிப்பதால் இயற்கைச் சமநிலை குழம்ப வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது. மேலும் - சுற்றாடலில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை வீசும்போது- அவற்றுள் நீர் தேங்குவதால் நுளம்பு, இலையான் உட்பட நோய்க்காவிகள் உற்பத்தியாகும் இடங்களாக அவை மாறி, எமக்குத் தீங்கு விளைவிக்கின்றன. அத்துடன், கால்நடைகள் பொலித்தீன்களை உட்கொள்வதால் அவை இறக்கும் நிலையும் உருவாகின்றது. உதாரணமாக, திருமலை கோணேஸ்வரர் ஆலயப் பகுதியில் வாழும் மான்களில் ஒன்று இத்தகைய பொலித்தீன்களை அதிகம் உட்கொண்டமையால், அண்மையில் இறந்ததை இங்கு குறிப்பிட்டுக் கூறமுடியும்.

***இவற்றிற்கான தீர்வுகளாவன -***

★ மக்கள் மத்தியிலான விழிப்புணர்வு -

அடிப்படையில் இப்பிரச்சினை தொடர்பில் மக்கள் மத்தியிலான விழிப்புணர்வே அவசியமானதொன்றாகும். எனவே, மாணவர்களின் பாடசாலைக்கல்வியில் சூழலியற்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். மக்கள் மத்தியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையின் தாக்கங்கள் பற்றிய அதிகளவான பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். இதன்மூலம், மக்கள் தாமாகவே இத்தகைய பொருட்களின் பாவனையை குறைக்க முன்வருதல் வேண்டும்.

★ இறுக்கமான சட்டக் கட்டுப்பாடுகள்-

வளர்முக நாடுகளை பொறுத்தவரையில் சூழற் பாதுகாப்பு தொடர்பில் இறுக்கமான சட்ட கட்டுப்பாடுகள் எவையும் இல்லை என்றே கூறலாம். ஆயினும் - மேற்குலக, வளர்ந்த நாடுகளில் சூழல் பாதுகாப்பு தொடர்பில் இறுக்கமான சட்டக்கட்டுப்பாடுகள் காணப்படுவதுடன் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களின் உற்பத்திக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்த வரையிலும் இந்தச் சட்டக் கட்டுப்பாடுகள் குறைவாகவே உள்ளன. எனவே இறுக்கமான சட்ட கட்டுப்பாடுகளும், இத்தகைய பொருட்கள் மீதான தடையும் அவசியம்.

★ பல்தேசிய கம்பனிகளின் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள்-

மேற்குலக நாடுகள், வளர்ந்த நாடுகளில் சூழற் பாதுகாப்பு தொடர்பாக ஏற்பட்ட அறிவு மேம்பாட்டின் காரணமாகவும், இறுக்கமான சட்டக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் அந் நாடுகளில் தோற்றம்பெற்ற பல்தேசியக் கம்பனிகள் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களைத் தமது உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளமுடியாதநிலை தோன்றியது.

## செய்திக் கட்டுரை



இந்நாடுகள் இத்தகைய பொருட்களுக்கு தடையும் விதித்துள்ளன. எனவே, புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடி, இத்தகைய பல்தேசியக் கம்பனிகள், மூன்றாம் மண்டல வளர்முக நாடுகளுக்குத் தமது கால்களை அகல விரிக்கத் தொடங்கின. இதற்கு, மூன்றாம் மண்டல நாடுக ளில் காணப்பட்ட திறந்த பொருளா தாரக் கொள்கை, வெளிநாட்டு முதலீடுகளை வரவழைப்பதற்கான ஊக்குவிப்புகள், சூழற் பாதுகாப்புத் தொடர்பான குறைந்தளவு சட்டக் கட்டுப்பாடுகள் என்பன - பல்தேசியக் கம்பனிகள் இலகுவாகக் கால் பதிக்க உதவின. பல்தேசியக் கம்பனிகள் இந்நாடுகளின் அபிவிருத்திக்கு அவசியமானதொன்றாயினும் இவற்றினால், இந் நாடுகளின் சுற்றுப்புறச்சூழல் மிக மோசமாகப் பாதிப்படைகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

★ சூழல் பாதுகாப்பு அமைப்புக்களின் உருவாக்கம் -

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான எந்தவித அமைப்புக்களும் இல்லை என்பது கவலை தரும் ஒரு விடயம். நுகர்வோர் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்டுள்ள நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் கூட பெயரளவில் மட்டுமே உள்ளது. இதுவரை, சூழல் பாதுகாப்புத் தொடர்பான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே சூழல் பாதுகாப்புத் தொடர்பான அமைப்புக்கள் கட்டாயமாக உருவாக்கப்படுதல் வேண்டும். அத்துடன் உருவாக்கப்படும் இவ்வமைப்பு கட்டாயமாக மாணவர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் பாவனையால் ஏற்படும் தீங்குகளை விளக்கக்கூடிய தொடர் பிரசாரங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ பதிலீட்டுப் பொருட்களின் பாவனையை அதிகரித்தல்:-

பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களுக்குப் பதிலாக, மக்கள் - புவியியல் சுற்றோட்டத்துக்கு உட்படக் கூடிய பொருட்களை பயன்படுத்துதல் வேண்டும். பிளாஸ்ரிக்கினால் ஆன வீட்டுப் பாவனைப் பொருட்களுக்குப் பதிலாக மரத்தினால் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பொலித்தீன், பிளாஸ்ரிக்கினால் பொதியிடப்படுவதைத் தவிர்த்து - சுற்றோட்டத்திற்கு உட்படக்கூடிய பொருட்களான கடதாசி உறைகளினாலோ அல்லது மரப் பலகைகளினாலோ பொதியிடப்படலானது மேற்கொள்ளப்படுவதை உற்பத்தி நிறுவனங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

இவ்வாறாக இத்தீர்வினைக் கடைப்பிடிப்பதன் மூலமும், நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இப்பிரச்சினையால் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

இறுதியாக - இன்று புரையோடிய புற்றுநோயாக வெளிப்படாதுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களின் பிரச்சினை மிக விரைவில் திடீரென வெளிப்படும்பொழுது அதன் தாக்கமும் பாரியதாக இருக்கும். எனவே - இன்று முதலே இப்பிரச்சினைக்கான தீர்வுகளை கடைப்பிடிப்பதோ, செயற்படுத்துவதோ அவசரமானதுடன் அவசியமானதொன்றும் கூட. அவ்வாறு செய்யாதுவிடின் எமக்கு நாமே குழிபறிப்பதுடன் எமது இனத்துக்கும், எமது எதிர்கால சந்ததியினருக்கும் துரோகம் இழைத்தவர்களாவோம். எனவே -குடாநாட்டைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குடி மகனும் இது விடயத்தில் அக்கறையும் கரிசனையும் கொண்டு செயல்படுவது காலத்தின் கட்டாயம் ஆகும். *

**இயேசுநாயகம் ஜெயசுதன்.**
**B.Com.**

## எங்கே போகிறோம்...?

நேசன்

# வாழ்வின் அழகும்... நமது போக்கும்...

இயற்கையாய் அமைந்த எதிலுமே ஒரு அமைவொழுங்கும் இனிமையும் காணப்படுகிறது . மனிதனும் – மனித வாழ்வும் கூட அங்ஙனமானவை தான். இயல்பான மனித குணங்களில் கூட ஒரு அழகு குடியிருப்பதனை ஆழ்ந்து பார்ப்பவர்களால் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய அழகு எப்போதுமே இருந்து வருகிற ஒன்றுதான். அதனைக் கண்டுகொள்ளும் பார்வையும் உணர்ந்து கொள்ளும் பக்குவமும்தான் காலத்துக்குக் காலம் ஆளுக்குஆள் வேறுபடுகிறது.

எதிர்மறைத் தன்மையற்ற – முரண் குணங்களின் விளைவாய்த் தோன்றாத இயல்புகள்தான் வாழ்க்கையிடத்திலும் மனிதனிடத்திலும் இவ்வாறான அழகினை நிலையாக இருக்கச் செய்கின்றன.

மனிதனுடைய அன்பு... மனிதனுடைய அழகுணர்ச்சி... மனிதனுடைய உதவும் தன்மை...

தாராளகுணம்... நன்றியுணர்ச்சி... கருணை... நல்லறிவு... அதன் விளைவான செயற்பாடுகள்... இவற்றின் விரிவாக்கமே நல்வாழ்வாய் – ஆனந்தமாய் வாழ்வின் அர்த்தமாய்ப் பரிணமிக்கின்றன.

இத்தனைக்கும் மத்தியில் தோன்றுகின்ற சோதனைகளை ... துயரங்களை... வேதனைகளை... சங்கடங்களை... நம்மால் புறந்தள்ளிவிட முடிவதில்லை.

இத்தகைய துன்பங்களின் காரணமாய் அமைவன எவை என்று ஆராய்வோமானால், நம் வாழ்வின் இன்னொரு பக்கம் எமக்குத் தெரியவரும்.

அன்பும் இரக்கமும் அளவற்ற கருணையும் இனிமையானவை. தாம் என்று உணரப்பட்ட போதும்... சுயநல உணர்வும்... எதுவும் தனக்கே என உடைமை கொண்டுவிடும் குணமும் பிறன் பொருட்டுத் தான் நோவதற்குத் தயாராகாத சிறுமைத்தனமும் எம்மிடம் தலையெடுத்து, நம்மை ஆட்கொள்ளும்போது மனம் அழகை இழக்கிறது – வாழ்க்கை அழகை இழக்கிறது. நல்லியல்புகளும் நலம் தரும் பண்புகளும் எப்போதும் தம்மளவில் வசீகரமும் ஒளியும் கொண்டு தான் விளங்குகின்றன. அவை எவர்க்கும் எப்போதும் நன்மையைத்தான் கொடுக்கின்றன.

கர்வத்தால் இறுகிப் போன முகமொன்றைக் காட்டிலும் இனிமையான புன்னகை தவழும் முகம் அதை உடையவர்க்கு மாத்திரமன்றி அடுத்தவர்க்கும் சந்தோஷத்தைத்தான் தருகிறது... வெறுப்பாய் உதிரும் வார்த்தைகளைக் காட்டிலும் அன்பாய் ஆதரவாய் ஒலிக்கும் சொற்களில் இனிமை சொட்டத்தான் செய்கிறது.... அவநம்பிக்கை தரும் இருண்ட பேச்சைக் காட்டிலும், நம்பிக்கை தரும் வாசகங்கள் கேட்பவர் இதயத்தில் ஒளியூட்டத்தான் செய்கின்றன.

போலித்தனமான செயற்கை அலங்காரப் போக்குகளைக் காட்டிலும் உண்மையும் எளிமையும் துலங்குகின்ற வெளிப்படையான நடத்தைகள் இதமான உணர்வைத்தான் தோற்றுவிக்கின்றன....

இவையெல்லாம் நாம் நமது அன்றாட வாழ்வில் தரிசிக்கின்ற வெளிப்படை இயல்புகள்... அழகுகள்....

மாறாக வலிந்து ஏற்றுக்கொள்கிற எதிர்மறைக் குணங்களாலும், எதையெடுத்தாலும் தானே என்றும் தனக்கே என்றும் உட்சுருங்கி ஒடுங்கிப் போகும் இருண்ட பண்பினாலும், நம்மிற் பலர் நமது சொந்தவாழ்க்கையையே நோய்க்களமாக்கி, நாமும் நொந்து அடுத்தவரையும் நோகடித்துக் கொண்டிருக்கிறோம்.

பொருளாசையும் உடைமை உணர்வும் எல்லை மீறி, எம்மைப் பாதை மாற்றி இட்டுச் சென்று கொண்டிருக்கின்றன. நாம் யார் – நாம் யாராக மாறிக் கொண்டிருக்கிறோம் என்கிற விழிப்புணர்ச்சியை நாம் படிப்படியாக இழந்து வருகிறோம்.

எதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் – எதை இழந்தாலும் பரவாயில்லை என்பது பற்றி நாம் தவறான முடிவுகளை எடுத்து வருகிறோம். பொருளைக் காப்பாற்ற வேண்டி மகிழ்ச்சியை இழந்து வருகிறோம்.

நான் என்ற கர்வத்தை விட முடியாமல், நல்ல அன்பை இழந்து வருகிறோம்...

உடைமைகளை மேலும் மேலும் தேட விரும்பி, மானத்தையும் மரியாதையையும் கூட இழக்கத் தயாராகிறோம்...

சின்னச் சின்னச் சந்தேகங்களையும் தற்காலிகச் சுகங்களையும் காப்பாற்ற விரும்பி, அடுத்தவர் மனங்களை அவ்வப்போது நிர்த்தாட்சண்யமாய் நோகடித்து வருகிறோம்...

எல்லாவற்றினூடாகவும் நாம் 'நமக்குள்' மிகவும் குறுகி ஒடுங்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்.

எப்போதோ ஒரு நூலில் படித்த ஒரு அறிஞரின் வாசகம் நினைவுக்கு வருகிறது.

"உணவு மேசையில் குடிப்பதற்காக வைத்த பானத்தைத் தற்செயலாகத் தட்டிவிடாதிருப்பது பெரிய பண்பல்ல – யாரேனும் அதனைத் தற்செயலாகத் தட்டிவிட நேர்ந்தால் அதனைக் கண்டு கொள்ளாமல் பெரிதுபடுத்தாமல் இருப்பது தான் பெரும் பண்பு" – மென்மையான, நல்ல மனிதப் பண்பை இந்த வாசகம் உணர்த்தவில்லையா?

இன்று நாம் நமது அன்றாட வாழ்வில் கண்டு கொண்டிருப்பதென்ன...?

எவ்வாறாவது அடுத்தவரின் வாய்ப்பை லாவகமாகத் தட்டிப்பறிப்பது...

அவதூறு சொல்லியாவது அடுத்தவனை மேலே வரவிடாது செய்து வருவது...

கூலிகொடுத்தாவது நமக்காகக் கைதட்ட ஒரு கும்பலை உருவாக்கிக் கொள்வது...

பணம் காசு கொடுத்தேனும் பதவியை வாங்கிக் கொள்வது...

அடுத்தவர் பார்த்துப் பெரிய மனிதன் என்று புகழ வேண்டும் என்பதற்காகத் தன் தரத்துக்குக் கீழான காரியத்தைக் கூசாமல் செய்யத் துணிவது...

இப்படியாக நமது காரியங்கள் பல 'உன்னதங்களின் உச்சங்களைத்' தொட, நம்மை விரல் பிடித்தழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன...

நாமும் வழியிழந்தவர் போலவும் விழியிழந்தவர் போலவும் அறியாமைகளைப் போற்றும் சின்ன மனிதராகிக் கொண்டிருக்கிறோம்.

இப்போதெல்லாம், நாம் மாணவராக இருந்த காலத்தில் போற்றிப் பயின்ற நல்ல கருத்துக்கள், இனிவரும் புதிய சந்ததியினரால் ஏற்றுக் கொள்ளப்படுமா, புரிந்து கொள்ளப்படுமா என்று சந்தேகம் வருகிறது.

"முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்னும் குறள் தரும் போதனையின் உள்ளர்த்தம், எமது நாளைய மனிதர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமோ அல்லது தவறான கருத்தென்று ஒரேயடியாய்த் தள்ளப்பட்டுவிடுமோ என்று அச்சம் வருகிறது.

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமையும் நயத்தக்க நாகரிகம்"

இனி நகைப்புக்கிடமான செயலாய் ஒரு நகைச்சுவைத் துணுக்கைப் போல் பார்க்கப்பட்டுவிடுமோ என ஐயம் வருகிறது...

காசை வைத்து எதையும் சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கையைச் சிறிசுகளுக்கு ஊட்டிவிட முயலுகின்ற பெரிசுகளைப் பார்க்க ஒரு விதத்தில் அனுதாபமாயும் இருக்கிறது. நாம் எங்கேதான் போய்க் கொண்டிருக்கிறோம்....?

- மீண்டும் சந்திப்போம் -

# அதிர்ஷ்ட வாரம்

## 13.12.2002 தொடக்கம் 19.12.2002

**சித்திரபானு ஸ்ரீ கார்த்திகை மீ 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

திதி : பூர்வபட்ச நவமி பி.ப.3.09 வரை அதன் மேல் தசமி
நட்சத்திரம் : உத்தரட்டாதி மாலை 6.10 வரை அதன்மேல் ரேவதி

### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு குறைவு, தாணகவே செலவு தேடி வரும், மனச சஞ்சலம், தானென்ற கர்வநிலை, இதனால் வாக்குவாதம், அயலவர்களுடன் நல்லுறவைப் பேணவும், ஞாயிறு, திங்களில் மட்டும் தெய்வ வழிபாடு, மனமகிழ்ச்சி, நண்பர்கள், உறவினர் வரவு ஆகிய பலன்களுடன் பிதாவின் தேகசுகம் நன்று, மாதாவின் தேகசுகம் நன்று, கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு தாமதமடையும், செய்தொழில் வரவு சமம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வி சமம், வியாபாரம் சமம்.

### இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வ வழிபாடு, பணவரவு நன்று, சமய அறிஞர் உறவு, தெய்வசேவை, விருந்துபசார மகிழ்வு, மனமகிழ்ச்சி, திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் தேவையற்ற செலவு, இயன்றளவு மௌனத்தைப் பேணுவது நன்று, பிதா தேகசுகம் சமம், மாதா தேகசுகம் நன்று, கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய் தொழில் முன்னேற்றம் குறைவு, தொழில் ஸ்தானத்தில் மௌனம் சாதிப்பது நன்று, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வ வழிபாடு, சமூக சேவையில் மனநிறைவு, மக்களால் மதிக்கப்படுதல், தெய்வசேவை, சமய அறிஞர் தரிசனம், மகிழ்ச்சியுடன் சுற்றுலாப் பயணம், பெண்களால் மகிழ்ச்சி, செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் தேகசுகக்குறைவு, வீண்செலவு, இயன்றளவு மௌனம் சாதிப்பது நன்று, பிதா தேகசுகக் குறைவு, மாதா தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் தேகசுகம் சமம், திருமணப் பேச்சு வேகத்துடன் போய் தாமதமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரம் ஆரம்ப வேகம் குறைவு, இறுதி வேகம் நன்று.

### கர்க்கடகம்

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பிரணவ உபதேசத்தில் சிவனுடன் முருகன் மகிழ்ந்தது போல் பிதாவுடன் பிள்ளை மகிழ்வு, தெய்வ வழிபாடு, சமூக சேவையில் ஈடுபாடு, உற்சாகம், சுற்றுலா மகிழ்ச்சி, பெண்கள் மன மகிழ்ச்சி, விதம் விதமான உடைகள் அணிவதில் குதூகலிப்பு, தெய்வசேவை, சமய அறிஞர் உறவு, பிதா தேகசுகம் நன்று, மாதா தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிவன் பிட்டுக்கு மண் சுமந்தது போல் தொழில புரிய முடியும், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்டு இவ்வார ஆரம்ப இரு தினங்களில் மட்டும் புதிய காரியங்களில் பிரவேசிப்பது நன்றல்ல, அதன் பின் சந்தனுவை பீஷ்மர் மகிழ்வித்ததுபோல் பிதா மகிழ்ச்சி, தெய்வ சேவையில் மதிப்பு, எதிரியின் தொல்லை குறைவு, மனமகிழ்ச்சி, தான தருமம், சுற்றுலா மகிழ்ச்சி, பிதா தேகசுகம் சமம், மாதா தேகசுகம் நன்று, கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர் தேக சுகம் சமம், திருமணப் பேச்சு இறுதி வேகம் குறைவு, செய்தொழில் லாபம குறைவு, தொழில் ஸ்தானத்தில் சிவன பிட்டுக்கு மண் சுமந்தது போல் தொழில் புரிய முடியும், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரம் வேகம் குறைவு.

### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தெய்வ வழிபாடு, வனிதையர் வனப்புடன் விளங்குவர், ஆடை அணிகலன் மேலும் மெருகூட்டும், சுற்றுலா மகிழ்வு, கலை நிகழ்ச்சிகளில் பங்கு, பிதாவும் பேரப் பிள்ளைகளைப் போல் இளமையுடன காட்சியளிப்பர், தெய்வ சேவை, சமய அறிஞர்களுடன் கருத்துப் பரிமாறல் ஆகிய பலன்களுடன் ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களில் தூரப்பிரயாணம், புதிய காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், பிதா தேகசுகம் நன்று, மாதா தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் தேக சுகம் நன்று, திருமணப்பேச்சு வேக வளர்ச்சியுடன் காணப்படும். செய் தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் வார இறுதி மூன்று நாட்களும் சிவன் வைகைக் கரையில் பிட்டுக்கு மண் சுமந்தது போல் காணப்படுவர். மாணவர் கல்வி சமம், வியாபாரம் வார நடுப் பகுதியில் வேகம் குறைந்து காணப்படும்.

### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தெய்வ வழிபாடு, பழைய கடன் வரவு, எதிரி தனிமையில் மௌனம், புதிய கடன் வசதி, நோய் நீக்கம், எடுத்த காரியம் வெற்றியாதல், மங்கையர் மகிழ்வுடன் திகழ்வர், இனிய பண்டங்களை இன்புறக் கொடுத்து மகிழ்வர், உடலுக்கு மெருகூட்டும் ஆடை அணிகலன்களுடன் மகிழ்வுடன் திகழ்வர், கடைசி மூன்று தினங்களிலும் புதிய காரியங்களில் ஈடுபடுவது, தூரப்பிரயாணம் ஆகியவற்றைத் தவிர்க்கவும், பிதா தேக சுகம் நன்று, மாதாவின் தேக சுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர் தேகசுகக் குறைவு, திருமணப்பேச்சு ஆரோகணத்துடன் காணப்படும். செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சிறப்பாக தொழில் புரிய முடியும். மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முனனேற்ற வேகம் குறைவாக காணப்படும்.

### விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வ வழிபாடு, தெய்வ சேவையில் ஈடுபாடு, சமய அறிஞர் நல்லுறவு, பணவரவு, கடன் வசதி, முயற்சி திருவினையாக்கும், சத்துருவுக்கு சங்கட நிலை, பெண்கள் மற்றவர்கள் கண் குளிரும்படி தெய்வீக கோலத்துடன் திகழ்வர். தேவையற்ற பொருட்களை கொள்வனவு செய்யாமல் இருப்பது நன்று, பிதா தேக சுபம் நன்று, மாதா தேகசுகம் சமம், கணவன் மனைவி தேக சுகம் நன்று, புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு சிறிய தடை தாண்டிய ஓட்டத்தை காண வேண்டி வரும், செய்தொழில் லாபம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாக தொழில் புரிய முடியும். மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் வார நடுப் பகுதியில் சிறிய தாழ்வுடன் காணப்படும்.

### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்ப இரு தினங்களில் வீட்டில் பெண்களுக்கு சுகயீனம், வைத்தியச் செலவு, பணவரவு குறைவு, ஏமாற்றம் ஆகிய பலன்களுடன் தெய்வ சேவை, சமய அறிஞர் நல்லுறவு, பழைய கடன் வரவு, எதிரியின் தொல்லை குறைவு, மகிழ்ச்சி, பிதா தேகசுகம் நன்று, மாதா சுகம் நன்று, கணவன், மனைவி தேகசுகம் நன்று, புத்திர சுகக் குறைவு, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய் தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம் சமம், வியாபார முன்னேற்றம்

### மகரம்

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தெய்வ வழிபாடு, உற்சாகம், எடுத்த காரியம் வெற்றி, ஆடை ஆபரண அலங்காரம், விருந்துபசாரத்தில் மகிழ்வு, வீட்டில் வைத்தியச் செலவு, கொடுத்த பணம் வருவது தாமதம், வாகனச்செலவு, வண் அலைச்சல், சமய சமூக சேவையில் மதிப்பு, பிதா தேகசுகம் நன்று, மாதா தேகசுகம் நன்று, புத்திர தேகசுகம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி நிலை சமம், வியாபாரம் முன்னேற்றம்.

### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ் வாரம் வரவுக்கு மிஞ்சிய செலவு, குடும்பங்களில் தேவையற்ற வாக்குவாதம், மனச்சஞ்சலம், அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், வைத்தியச் செலவு, உறவினர்களால் செலவு, வீட்டில் செலவு, கொடுக்கல் வாங்கல் சிக்கல், வீண் அலைச்சல், பிதா தேக சுகம் நன்று, மாதா தேகசுகம் சமம், கணவன் மனைவி தேக சுகம் சமம், புத்திரர் தேக சுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம் சமம், வியாபார முன்னேற்றம்.

### மீனம்

**பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வ வழிபாடு, பணவரவு, நண்பர்கள், உறவினர்கள் வரவு, விருந்தோம்பல் மகிழ்வு, மங்கையர் மலர்ச்சியுடன் திகழ்வர், மனதில் உற்சாகம் ஆகிய பலன்களுடன் ஞாயிறு தினங்களில் மட்டும் ஒரு சில தீய பலன்களை எதிர்பார்க்கலாம். பிதா தேகசுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின்
புத்திரர்
**இ.வெங்கடேச ஐயர்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டு நிலமைகளை தூதரகங்கள் அவதானிப்பு

யாழ்.குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் சம்பவங்களின் மூலமாகவே ஈ.பி.டி.பி. என்ற அமைப்பு இயங்குவது பற்றித் தமக்குத் தெரியவந்திருப்பதாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் சில ராஜதந்திரிகள் செய்தியாளர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டு நிலவரத்தைத் தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

குறிப்பாக நெல்லியடியில் நடை பெற்ற சம்பவம் பற்றிய தகவல்களைப் பெறுவதில் அவர்கள் கூடுதல் ஆர்வம் காட்டியுள்ளனர்.

# நான்கு போராளிகள் அம்பாறையில் கைது

(அம்பாறை)

அம்பாறை - உதயபுரம் பகுதியில் இரண்டு பெண் போராளிகள் உட்பட 4 விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உதயபுரம் சோதனைச்சாவடியூடாக இவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றதாகவும் - நிறுத்துமாறு கேட்கப்பட்ட போதும் அவர்கள் தமது வாகனங்களை நிறுத்தாததால் இவர்கள் கைதானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். வந்த தென்னாபிரிக்க நீதிபதி பல்வேறு தரப்பினரையும் சந்தித்தார்



(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்காவிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அந்நாட்டு நீதிபதி அல்பிசார்க்ஸ் யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு தரப்பினருடன் சந்தித்து கலந்துரையாடல் நடாத்தினார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் பாஷையூரிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் சந்திப்புக்கள் ஆரம்பமாகின. முதலாவது சந்திப்பில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட்தந்தை ஜெயக்குமார், நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை பேணாட், முன்னாள் அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்விழி, வட பிராந்திய கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, தென் பகுதி காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத் தலைவி விசாக தர்மராச ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர். நண்பகல் வரை இக் கலந்துரையாடல் நீடித்தது.

நண்பகலுக்குப் பின்னர் இரண்டாவது அமர்வு நடைபெற்றது.

இவ்வமர்வின் போது தென்னாபிரிக்க நீதிபதி நீண்ட உரையாற்றினார். 'தென்னாபிரிக்க அரசியற் திட்ட உருவாக்கலில் சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கின் அரசியல்' என்ற தலைப்பில் அமைந்த இவரது உரை மாலைவரை நீடித்தது.

இதனைத் தொடர்ந்து, திருநெல்வேலியிலுள்ள நல்லாயன் இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்றில் தென்னாபிரிக்க நீதிபதி பங்குபற்றினார். பின்னர் இரவு 7 மணியளவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் சந்திப்பொன்று நடைபெற்றது.

## வட - கிழக்கிற்கு...

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இன்றைய அவசியத் தேவையினைக் கருத்திற் கொண்டும், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவும்- உலக வங்கி 31 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இம் மாகாணத்தின் துரித புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இந்நிதி பயன்படுத்தப்படும், இவ்வாறு இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக் கேட்போர் கூடத்தில் நேற்று மதியம் வடக்கு- கிழக்கு மாகாண சபைக்கும் உலகவங்கிக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. மாகாண சபையின் சார்பில் பிரதம செயலாளர் எஸ்.தங்கராஜும் உலக வங்கியின் சார்பில் பீற்றர் ஹரோல்டும் கைச்சாத்திட்டனர். இவ் வைபவத்தில் மாகாணசபை செயலாளர்களும் திணைக்களங்களின தலைவர்களும், நிக்கொட், நியாப் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலநது கொண்டனர். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வைபவத்தில் பீற்றர் ஹரோல்ட் உரையாற்றுகையில்,

சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்கான முயற்சிகள் இலங்கையில் துரிதப்படுத்தப்படும் இவ் வேளையில், உலகவங்கி - இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களின் பொருளாதார நிலையை முன்னேற்றுவதற்கும் - 31 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அவசர புனர்வாழ்வுத் திட்டத்திற்கு இப்புதிய நிதி உதவியாக அமையும். இதன்மூலம் அடிப்படை சுகாதார நடவடிக்கைகள், நகர நீர் விநியோகத் திட்டங்களைத் திருத்தியமைத்தல், மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் மக்களுக்கு வருமானம் சம்பாதிப்பதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல், மற்றும் எதிர்காலங்களில் பெருமளவு உதவி வழங்கும் ஸ்தாபனங்களிடம் இருந்து நிதியைப் பெற்றுப் புனர்நிர்மாணத் திட்டத்தை வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்குக் கிடைக்கப் பெறாத அபிவிருத்திக்கான உதவியை வழங்குவதற்கும், இது ஆரம்ப உதவியாக இருக்கும். இந்தத் திட்டத்தை வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வகிக்கும். இலங்கையிலுள்ள மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு இந்த உதவியை நாம் வழங்கவிருக்கிறோம். வறுமையைக் குறைக்கும் உலக வங்கியின் அடிப்படை இலட்சியத்தை மையமாக வைத்தே நாம் இதனை மேற்கொள்கிறோம் என்றார். (200)

## அமைச்சர், பொலிஸ்...

டறிந்து கொண்டனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடங்களில் இருந்து தொலைவில் அமைந்திருந்த - மூடிக கிடந்த கடையொன்றினைத் திறந்து, கடை உரிமையாளரை மிக அருகில் வைத்துச் சுட்டுப் படுகாயமடைய வைத்த சம்பவம் நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்டனர்.

தொடர்ந்து- நெல்லியடிப் பொலிஸ நிலையத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், நெல்லியடிப் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி, நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் மு.சுந்தரலிங்கம், செயலாளர் சி.தங்கராசா, யாழ்.வணிகர் சங்கத் தலைவர் ஜெயக்குமார், செயலாளர் க.நித்தியானந்தன், உப செயலாளர் ஜனக்குமார் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது, தங்களது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் எனவும், அத்துமீறிச் செயற்பட்ட பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வர்த்தக சங்கத்தினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது- பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும், சம்பந்தப்பட்டோர் மீது மேல் விசாரணைகள் இன்று முதல் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், இப்பகுதி வர்த்தகர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என பொலிசார் தரப்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நெல்லியடி வர்த்தகர்கள் தமது தொடர்ச்சியான கதவடைப்புப் போராட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (13,17)

## புளியங்குளத்தில் ...

ழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தில் கொண்டு சென்று ஒப்படைத்தார்.

பின், வவுனியாவிலுள்ள தமிழீழ வீடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர், யாழ்ப்பாண மாவட்ட அரசியற் துறையுடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் பின், மேற்படி மூன்று பாடசாலை மாணவிகளும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் துறைப் பணிமனையில் தங்க வைக்கப்பட்டனர்.

நேற்று மேற்படி மாணவிகளை அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கும் நிகழ்வு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். அரசியற்துறைப் பணிமனையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளமபரிதி தலைமையில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். இணைப்பதிகாரி சந்திரசேகரா முன்னிலையில் மூன்று மாணவிகளும் தத்தமது பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

இறுதியில் -

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரையாற்றினார். (லி)

## கொள்கலனுக்குள்...

தளத்தில் இவை பயிற்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தனவென்றும் தெரியவந்தது. கடந்த எட்டு வருடங்களாக பாவிக்கப்படாமல் இருந்த விமானங்களைத் திருப்பி அனுப்புவதற்காகவே இவை கொள்கலனில் ஏற்றப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்தது.

இதேவேளை - பொலிஸாரின் விசாரணைகளை இடைநிறுத்துமாறு அமைச்சகம் ஒன்றிலிருந்து கடிதம் வந்ததையடுத்து விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன. இந்த விமானங்கள் கொழும்புத் துறைமுகமூடாகவே கொண்டு வரப்பட்டதென்றும், இவை புலிகளுக்கே கொண்டு செல்லப்படவிருந்ததாகவும் கொழும்பில் நேற்று பரபரப்பாகச் செய்திகள் அடிபட்டன.

## நீதியான...

வேயின் உதவியுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. அரசாங்கமும் இதய சுத்தியோடு செயற்படவேண்டும். முன்னர் நடைபெற்ற பல பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள் என்று எடுத்துக் காட்டிய, யாழ். ஆயர் - நீதியான அரசியல் தீர்வு இம்முறையாவது ஏற்பட அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் ஜேர்மன் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதேவேளை - தூதுவர் எலியாஸ், இன்று தென்மராட்சிக்குச் சென்று போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார். பின்னர், தரைப்பாதையூடாக வன்னி சென்று புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனையும் சந்திக்கவுள்ளார். (200)

## குடாநாட்டில்...

மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்திருந்ததுடன் வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

யாழ். நகரம் உட்பட குடாநாட்டின் அனைத்துப் புறநகர்ப் பகுதிகளும் நேற்றையதினம் ஸ்தம்பிதமடைந்தன. குறிப்பாக வடமராட்சியில் நெல்லியடி நகரம் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.

எனினும், நேற்றைய தினம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகள் அனைத்தும் எந்தவித இடையூறும் இன்றி சுமுகமாக நடைபெற்றன. அதேபோல் - மருத்துவ நிலையங்கள், மருந்து விற்பனை நிலையங்கள் என்பன மாத்திரம் வழமைபோல் இயங்கின.

# வெடிப்பொருட்கள் அழிப்பு மழையினால் இடைநிறுத்தம்

(வவுனியா நிருபர்)

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் வவுனியா வடக்குப் பகுதியில் இருந்து அகற்றப்பட்ட வெடிபொருட்களில் ஒருபகுதி நேற்று அழிக்கப்பட்டது.

2500ற்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் உட்பட பெருமளவு வெடிபொருட்கள் அழிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 75 ஆட்லறி ஷெல்கள் உட்பட சிறு தொகையான வெடி பொருட்கள் அழிக்கப்பட்ட நிலையில் மழை காரணமாக இப்பணி இடைநிறுத்தப்பட்டது.

வெடிபொருட்களை அழிக்கும் பணியில் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றும் பிரிவின் பொறுப்பாளர் யோகன், கண்ணிவெடி அகற்றும் பிரிவை சேர்ந்த பிரதிநிதி மார்க்ஸ் பொஸ்ட்போன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நேற்றைய ஹர்த்தாலின்போது

# வீதியில் ரயர் எரித்தவர் பொலிஸாரால் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்ட நேற்றைய ஹர்த்தாலின் போது, வீதியில் ரயர் கொளுத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று யாழ். நீதிமன்றில் நீதவான் முன் நிறுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கன்னாதிட்டிச் சந்தியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் வீதிக்குக் குறுக்கே ரயர் போட்டு எரித்த போது, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த ஜெயரட்ணம் [illegible]காந் என்பவரை யாழ்.பொலிசார் கைது செய்து நேற்று மாலை யாழ் நீதிமன்றில் யாழ். .நீதவான் முன் நிறுத்தினர்.

இதன்போது மேற்படி நபரை, யாழ். நீதவான் ஆர்.ரி.விக்கினராஜா எச்சரித்ததுடன், இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தும்படியும், பதினைந்தாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.37 | 96.82 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.47 | 152.81 |
| 1 யூரோ | 96.86 | 98.00 |
| 1 சுவிஸ் பிராங் | 65.60 | 66.62 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.71 | 54.68 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.